வக்கீல்

485

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-AUG 1954
MADRAS
485
3-54

ரெஸாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

THE VAKIL • TAMIL LAW MAGAZINE

"வக்கீல்"

பொது மக்களுக்கான

உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்— தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L.
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. (இலங்கையில் 30 சதம்) வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)
என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1953-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை	ரூ 3 12 0
"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை	ரூ. 5 8 0
"வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை	ரூ. 4 0 0
சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்]	ரூ. 1 4 0
தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனாக்கள், குத்தகைப் பத்திர நமூனா, வார சாகுபடிப் பத்திர நமூனா உள்பட விளக்கம்]	ரூ. 0 6 0
சரக்கு விற்பனைச் சட்டம் [The Indian Sale of Goods Act]	ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.

அணா 8 சேர்த்து அனுப்பினால் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்(S.I)

V. S. & Sons

SWEETS

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்
பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள் :
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,
கும்பகோணம்.
(Estd. 1925)

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக் கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள
பட்டு ஜவுளி தினுசுகள்
குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்:
ராணி ரெங்கய்யர் சன்ஸ்
கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.
பிராஞ்சு:
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை.

18731

1006 மங்கி மார்க்
2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்
சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்
கிருஷ்ண விலாஸ்
உதயகிரி விலாஸ்
வாசனை சீயக்காய்தூள்
எண்ணெய் குளிப்பதற்கு மிகச் சிறந்தவைகள்
தயாரிப்பவர்:—
கிருஷ்ண விலாஸ்
336, கீழ மாசிவீதி, மதுரை.
ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.
M. ஏகாம்பரம் செட்டியார்,
புரோப்ரைட்டர்.

டிரேட்மார்க் பேடன்ட் & டிசைன்
ரிஜிஸ்டர் மற்றும்
காபிரைட்
விபரத்திற்கு: ரிஜிஸ்டர்
ஐ. ஸி. ஏஜன்ஸி,
225, நாயக்கர் புதுத் தெரு, :: மதுரை.

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 6 — மே 1954 — இதழ் 5

ஆசியாவில் இடம்தேடும் அமெரிக்கா 3
நேருவுக்குஜே! 3
வருக வருக 4
மதுவிலக்கும்—குறுக்கெழுத்துப் போட்டியும் இரண்டுக்கும்தான் சட்டம்வேண்டும் 4
புதிய சட்டங்கள் 5
சர்க்கார் அறிக்கைகள் 7
வழக்கும் - தீர்ப்பும்
'எக்ரிமெண்ட்' எழுதப்பட்ட காகிதத்தின் இரண்டு ஓரங்களையும் கத்தரித்து எறிந்து விட்டு, அவன் மற்ற ஷரத்துக்களை வற்புறுத்த வாதிகள் தாவா செய்தனர்.
காட்டில் திரியும் பிராணிகளைக் கொன்று எடுத்துக் கொள்ளுவதும் அடைக்கப் படாத திறந்தவெளி நீர்த் தேக்கங்களிலுள்ள மீன்களைப் பிடிப்பதும் திருட்டு அல்ல, அவை ஒருவருடைய சுவாதீனத்திலும் இருப்பவை அல்ல. 10
சர்க்காரால் ,தர்காஸ்து' கொடுக்கப்பட்ட நிலமானது 'பெயர் இரவலாக' (பினமியாக) வாங்கப்பட்டதென்று சொல் முடியுமா? 11
விற்பனைவரிச் சட்டம் ஸ்தாவர சொத்து சம்பந்தமாய் "ஒப்பந்த வேலை" (Works-Contract) பற்றிய ஷரத்து செல்லாது. சென்னை ஹைகோர்ட்டின் தீர்ப்பு சிப்பந்திகளின் சௌகரியத்திற்காக நடத்தப்படும் 'காண்டீன்' களுக்கும் விற்பனைவரி விதிக்க முடியாது. 11
தொழிற்சாலைச் சட்டம் 14
கேள்வியும் – பதிலும் 17
கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 21

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4-AUG 1954
MADRAS

மலர் 6 | மே 1954 | இதழ் 5

ஆசியாவில் இடம் தேடும் அமெரிக்கா

ஆசியாவில் இடம் தேடிவருகின்றது அமெரிக்கா. எதற்காக? தன்னிடமிருக்கும் அணுகுண்டுகளையும் ஜலவாயுக்குண்டுகளையும் ஆசியமக்கள் யார்மீதாவது போட்டுத்தான் ஆகவேண்டுமென்று அமெரிக்கா உறுதி செய்துகொண்டிருக்கிறது போலும்! இப்பரந்த உலகில் ஜலவாயுக் குண்டுகளைப் பரீட்சைசெய்ய அமெரிக்காவானது ஆசியாக் கடலோரத் தீவுகளையே பொறுக்கி எடுத்தது. இவ்விதம் செய்ததில் அமெரிக்காவுக்கு இரண்டுவித எண்ணங்கள் இருக்கலாம். பரீட்சையில் எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட்டால், ஆசியமக்கள் தானே மடிவார்கள்—மடிந்தால் மடியட்டுமே — என்பது ஒன்று. இரண்டாவதாக இப்பரீட்சையைக் கண்டே ஆசிய நாடுகள் திகிலடைந்து அமெரிக்காவிடம் தாமாகவே சரண்புகலாமென்ற எண்ணமும் அமெரிக்காவுக்கு இருந்திருக்கலாம். இப்போது இந்தோ சைனாவில் யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஆசியநாட்டைப் பிரஞ்சுக்காரர்கள் விடமாட்டேன் என்று சொல்லுகின்றனர்.

ஆனால் நாட்டை வைத்துக் கொள்ளப் பிரஞ்சுக்காரர்களிடம் பலமில்லை. ஆகையால் பிரஞ்சுக்காரர்களுக்கு உதவிசெய்ய முன்வந்த அமெரிக்காவின் தலையிலேயே யுத்தப் பொறுப்பு முழுவதையும் போட்டுவிட்டுப் பிரஞ்சுக்காரர்கள் உல்லாசமாக இருக்கின்றனர். பிரஞ்சு ஆட்சியை ஒழிப்பதற்காகச் சண்டையிடும் கட்சிக்குச் சீனா உதவி புரிகின்றது. கம்யூனிஸ்டுச் சீனா உதவி செய்கிறதென்றால், பின்னணியில் ருஷ்யா நிற்கின்றதென்றே சொல்லலாம். இந்த யுத்தமானது முற்றினால் ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் நேரிடையான சண்டை ஆரம்பிக்கலாம். அதுதான் மூன்றாவது மகாயுத்தமாகும். அமெரிக்கா ருஷ்யா இருவரிடமும் இருக்கும் பயங்கரக் குண்டுகளில் நாலைந்து போட்டு முடிவதற்குள் இப்பூவுலகின் முக்கிய பகுதிகளும் அத்துடன் இந்நாகரிகமும் மறையும்.

நேருவுக்கு ஜே!

இந்தோ-சைனாவுக்குப் படைகள் அமெரிக்க ஆகாயவிமானங்களின் மூலம் எடுத்துச்செல்லப்படுகின்றனர். ஆகாயவிமானங்கள் பாகிஸ்தான் இந்தியா வழியேதான் போகவேண்டும். இப்படைகளை ஏற்றிச் செல்லும் ஆகாய விமானங்கள் இந்தியாவைக்கடந்து செல்லுவதையும், இந்திய விமான நிலையங்களை உபயோகித்துக் கொள்ளுவதையும் நமது நேரு அனுமதிக்கவில்லை. அமெரிக்காவிடம் ராணுவ உதவி

கேட்டு நிற்கும் பாகிஸ்தானத்தின் தலை நகராகிய கராச்சியில் அமெரிக்க விமானங்கள் இறங்கி, எண்ணெய் போட்டுக் கொண்டு இலங்கைக்குப் போய் அங்கிருந்துதான் இந்தோ சைனுவுக்குப் போகின்றனர். உலக அரசியல் அரங்கத்தில் இந்தியா தலை நிமிர்ந்து நிற்கின்றது. நேருவுக்கு ஜே!

வருக, வருக!

மூன்று நூற்றுண்டுகளுக்கு முன் ஐரோப்பியர்களின் கண்கள் இந்தியா மீதும் கிழக்கு ஆசியா தேசங்களின் மீதும் பாய்ந்தன. இங்கே வியாபாரம் செய்ய வந்த ஐரோப்பியர்கள் எல்லோரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களல்ல. ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள், பிரஞ்சுக்காரர்கள், போர்ச்சுகீசுக்காரர்கள் இவர்களெல்லாம் தனித்தனித் தேசத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் ஆதிக்கம்பெற இவர்களுக்குள் பல வருடங்கள் போட்டி நடந்தது; யுத்தமும் நடந்தது. கடைசியில் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்டனர். ஆகையால் பிரஞ்சுக்காரர்கள் நாலைந்து இடங்களுக்குள் சுருங்கிக் கொண்டனர். இவைகளில் பெரிய பட்டினங்களான புதுச்சேரியும் காரைக்காலும் தமிழ்நாட்டின் ஒரு பகுதியே. இந்தியா சுதந்தரமடைந்து கூடப் பிரஞ்சுக்காரர்கள் தங்களிடமிருக்கும் இப்பட்டிணங்களை விடவில்லை. இந்தியாவுடன் தாங்கள் இணைந்து கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தவர்களைப் பிரஞ்சு சர்க்கார் துன்புறுத்தி வந்தனர்.

சென்றமாதம் புதுச்சேரியிலும் காரைக்காலிலும் ஒரு எதிர்பாராத புரட்சி ஏற்பட்டது. புதுச்சேரி மந்திரிசபையையும் சரி, புதுச்சேரி காரைக்காலைச் சேர்ந்த எல்லா முனிசிபாலிடிகளும்சரி, பொதுமக்களும்சரி, தாங்கள் உடனடியாக இந்தியாவுடன் இணைந்துவிடவேண்டுமென்று தீர்மானம் செய்து, அத்தீர்மானத்தைப்பிரஞ்சு சர்க்காருக்கும் இந்திய சர்க்காருக்கும் தெரிவித்துவிட்டனர். மக்களுடைய அபிப்பிராயப்படி தாங்கள் நடந்துகொள்ளத் தயாராக இருப்பதுபோல நடித்து வந்த பிரஞ்சு சர்க்கார், இதுவரை ஒன்றும் செய்யாமல் வீண்காலத்தை ஓட்டி வருகின்றனர். மக்களின் ஒரு முகமான தீர்மானம் தெரிந்து விட்டது. இனி பிரஞ்சு சர்க்கார் என்ன சாக்குப் போக்குச் சொன்னுலும் புதுச்சேரியும் காரைக்காலும் இந்தியாவுடன் இணைந்துவிடும். புதுச்சேரியும் காரைக்காலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தனவே. புதுச்சேரி காரைக்கால் மக்களே! வருக வருக!

மதுவிலக்கும்—குறுக்கெழுத்துப் போட்டியும் இரண்டுக்கும் தான் சட்டம் வேண்டும்

ஏழைமக்களை மதியிழக்கச் செய்தது மது என்றுல், வாழத்தெரியாத நடுத்தர மக்களை ஏமாற்றி ஓட்டாண்டியாக்குவது குறுக்கெழுத்துப் போட்டி என்ற ஒரு நவநாகரிகச் சூதாட்டமாகும். உண்மையில் குறுக்கெழுத்துப் போட்டி என்பது படித்த மக்களை ஏமாற்றிப்பணம் குவிக்கும் ஒரு முறையாகும். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறமிருக்க, யோக்கியமாகவும் உண்மையாகவும் உழைப்பவனுக்கு வாழ்க்கைச் செலவுக்குக்கூட ஊதியம் கிடைக்காதென்ற மனப்பான்மை சுதந்தர இந்தியாவில் பரவி வருகின்றது. இந்திய சுதந்தரத்தின் பொருளாதார லாபத்தை உயர்தரச் சர்க்கார் அதிகாரிகளும் உயர்தரக் கள்ளமார்க்கெட் வர்த்தகர்களும் தான் இதுவரை பகிர்ந்து வந்திருக்கின்றனர் போலும்! ஆகையால், வாழ்க்கைச் செலவுக்கும் உப்பு புளி வாங்கவும் பணம் போதாத படித்தமக்களேதான் இச்சூதாட்டத்தில் இரவு பகலாக ஈடுபட்டுக் கையிலிருக்கும் கொஞ்ச நஞ்சம் சில்லறைகளையும் இக்குறுக்கெழுத்து அரசர்களின் கஜாநுவில் கட்டுகின்றனர். இக்குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடுக்கவோ, அல்லது கட்டுப்படுத்தவோ, ஏதோ சட்டம் கொண்டுவரப் போவதாக நமது மத்திய அரசாங்க மந்திரிகளும்சரி, சென்னை ராஜ்ய மந்திரிகளும்சரி அடிக்கடி சொல்லுகின்றனர். ஆனுல் இவர்கள் துணிந்து ஒன்றும் செய்யவில்லை. குறுக்கெழுத்து முதலிய பலரகப் போட்டிகளை நடத்துகிறவர்களில் மிக மிகச் செல்வாக்குள்ள "தேசபக்தர்" களுமிருப்பதால், மந்திரிகள் பயப்படுகின்றனர் போலும்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1954-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

5. மத்திய அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation Act 1954. (18-3-1954) 1953-54 நிதி வருடத்தில் அரசாங்கப் பொது நிதியிலிருந்து மொத்தம் ரூ. 83, 89, 12,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் டில்லி பார்லிமெண்ட் சட்டம்.

6. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம். Appropriation - Railways - Act 1954. (18-3-1954) 1953 - 54 நிதி வருடத்தில் அரசாங்க ரயில்வேக்காக மொத்தம் ரூ. 33,17, 68,000 அரசாகப் பொது நிதியிலிருந்துச் செலவு செய்ய மத்தியசர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் டில்லி பார்லிமெண்ட் சட்டம்.

7. ஸி-ராஜ்ய அரசாங்கச் சட்டத் திருத்தம். Government of Part G States Amendment Act 1954. (18-3-1954). அஜ்மீர், போபால், குடகு, டில்லி, ஹிமாசல பிரதேசம், விந்தியபிரதேசம் முதலிய இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஸி - பாக ராஜ்யங்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ராஜ்ய நிர்வாகச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

12. குடிபெயர்ந்தோர் பாத்திய தொடர்ச்சிச் சட்டம். Displaced Persons (Claims) Supplementary Act 1954. (18-3-1954).

13. பத்திரிகை (ஆட்சேபகர விஷய)ச் சட்டத் திருத்தம். Press (Objectionable Matter) Amendment Act 1954. (25-3-1954) 1951-ஆம் வருடத்தில் இயற்றப்

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
Prop: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஸ்தாபிதம் 1941
ரிஜிஸ்டர் நெ. 152070

ஆறுமுகவிலாஸ் சீயக்காய் பவுடர் கம்பெனி
Pro: A. சின்னக்கனி நாடார் டோர் நிர். 7.
நெம்பர் 1 போலீஸ் ஸ்டேஷன் சந்து,
மதுரை.

மூர்த்தி ஸ்டோர்
செம்பனார்கோவில்
(மாயூரம் தாலுக்கா)
எங்களிடம் புது சைகிள்களும், சைகிள் சாமான்கள், பெட்ரோமாக்ஸ் லைட் சாமான்கள், தையல் மிஷின் சாமான்கள் & இதுபோன்ற சாமான்களும் விலை நயமாய் கிடைக்கும்.
சைகிள்களின் எல்லாவிதமான ரிப்பேர்களும் செய்யப்படும்.
உரிமையாளர்,
T. N. ராமமூர்த்தி.

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

பட்ட பத்திரிகைச் சட்டமானது இரண்டு வருடங்களுக்குத்தான் அமுலில் இருக்குமெனக் கண்டிருந்தது. இப்போது அச்சட்டம் நாலு வருடங்கள் நீடிக்குமெனத் திருத்தப்பட்டிருக்கிறது.

15. குடிபெயர்ந்தோர் ஆஸ்தி மாற்றல் சட்டம். Transeer of Evacuce Deposits Act 1954. (26-3-1954) இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தவர்களுடைய ஜங்கம ஆஸ்திகள் இந்தியாவிலிருப்பதைப் பாகிஸ்தானுக்கு மாற்றவும்; அதேவிசமாகப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக் குடியேறிவிட்டவர்களுக்குப் பாகிஸ்தானத்திலிருக்கும் ஜங்கம ஆஸ்திகளை இந்தியாவுக்கு மாற்றவும் இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையை அனுசரித்து இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்.

[சென்னைச் சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் ''வக்கீல்'' முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

8. ஜில்லாபோர்டு திருத்தச் சட்டம். Madras District Boards Amendment Act 1954. (30-3-1954) ஜில்லாபோர்டு மெம்பர்களின் பதவிக்காலம் 1-7-1953 உடன் முடிந்து விட்டபடியால், ஆந்திர ராஜ்யப்பிரிவினை காரணமாக 31-3-1954 வரை ஜில்லா போர்டுத் தேர்தல்களை நடத்த வேண்டாமென்றும் அதுவரை ஜில்லாபோர்டின் அதிகாரங்கள் விசேஷ அதிகாரியிடம் இருந்து வரவேண்டுமென்றும் 1953-ஆம் வருடத்திய 5-ஆவது சட்டம் இயற்றப்பட்டது. அச்சட்டம் இப்போது திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது 31-10-1954 வரையில் ஜில்லாபோர்டுகளுக்கு விசேஷ அதிகாரிகளே நீடித்து வருவார்கள். அதற்குள் தேர்தல் நடந்து 1-11-1954 முதல் புதிய ஜில்லா போர்டுகள் வேலைசெய்யத் தொடங்குமாறு அச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

9. சென்னை ராஜ்ய அரசாங்கச் செலவு அனுமதிச்சட்டம். Madras Appropriation Act 1954. (31-3-1954.) 1-4-1954 முதல் ஆரம்பமாகும் நிதிவருடத்தில் சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து ரூ. 94, 33, 70, 300 செலவு செய்யச் சென்னை ராஜ்ய அரசாங்கத்துக்கு அனுமதி கொடுக்கும் சென்னைச் சட்ட சபைச் சட்டம்.

சுல்தானியா
படைமருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ-சைனா முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிறங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி, எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 12. சிறிய சைஸ் பாட்டில் ஒன்று அணா 6

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

ஜெயரசம் டிப்போ,
அய்யம்பேட்டை, S. Ry.

சென்னையில் ஸ்டாக்கிஸ்ட்:—

E. A. N. அப்துல் லத்தீபு
அன் கோ
1 & 2, அண்ணா பிள்ளை தெரு,
கோத்தவால்சாவடி; :: மதராஸ்-1

சர்க்கார் அறிக்கைகள்

உணவு தானியம் - மத்திய சர்க்காரின் அனுமதி.

ஒரிசா ராஜ்யத்திலிருந்து சென்னை ராஜ்யத்திற்கு அரிசி நொய்யை வியாபாரிகள் தருவிப்பதை இந்திய சர்க்கார் அனுமதித்துள்ளனர். 1952-ஆம் வருடத்திய சென்னை உணவு தானிய லைசென்சுக் கொள்முதல் உத்தரவின்படி லைசென்சு வாங்கி இருக்கும் வியாபாரிகள் அவரவர் ஜில்லா கலெக்டர் மூலம் ஒரிசா சர்க்காருக்கு, மனுப்போட்டு பர்மிட் வாங்கிக்கொள்ள வேண்டும். அவர்களுக்குத் தேவையான அளவு எவ்வளவு என்றும், ஒரிசாவில் யாரிடமிருந்து தருவிக்க உத்தேசித்திருக்கின்றனரென்றும் மனுவில் குறிப்பிடவேண்டும்.

(1-4-1954 - சென்னைச் சர்க்கார் கெஜட்-பாகம் II-பக்கம் 362.)

கைத்தறி ஜவுளி விற்பனைக்கு இனி விற்பனை வரி கிடையாது. வேறு சில சரக்குகளுக்கும் விதி விலக்கு

சென்னை விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1)ல் கண்ட அதிகாரங்களை உபயோகித்து, இது விஷயமாய் இதற்கு முன் ஏற்பட்ட அறிக்கைகளை எல்லாம் ரத்துச்செய்து சென்னைச் சர்க்கார் 1-4-1954 முதல் அடியில் கண்ட சரக்குகளுக்கு விற்பனை வரி கிடையாதென்று விதிவிலக்கு அளித்திருக்கின்றனர். அவையாவன:—கைத்தறி ஜவுளி, முட்டை, மாமிசம், மீன், புஷ்பம், காய்கறி, பழங்கள். இவைகளின் எவ்வித விற்பனைகளுக்கும் 1-4-1954 முதல் விற்பனை வரி கிடையாது. மீன், மாமிசம், என்பதில் பக்குவம் செய்யப்பட்டு டின்னில் அடைக்கப்பட்டவையோ காயவைக்கப்பட்டவையோ சேர்ந்தவையல்ல. காய் கறி பழங்கள், என்பதில் உருளைக் கிழங்கு, வெங்காயம், பாக்கு, தேங்காய், நீர்சுண்டக் காய்வைக்கப்பட்ட வற்றல், பக்குவம் செய்யப்பட்டோ டின்னில் அடைக்கப்பட்டோ இருக்கும் காய் கறி பழங்கள், இவை சேர்ந்தவையல்ல. அதாவது இவைகளுக்கு விதி விலக்கு அளிக்கப்படவில்லை.

(7-4-1954 சென்னைச் சர்க்கார் கெஜட், பாகம் I பக்கம் 441)

போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நடத்தை விதிகள் திருத்தம்

1859-ம் வருடத்தியச் சென்னை ஜில்லா போலீஸ் சட்டத்தின் செக்ஷன் 8-ன்படிக்கும், 1888-ஆம் வருடத்திய சென்னை சிடிபோலீஸ் சட்டத்தின் செக்ஷன் 9-ன்படிக்கும் 1938-ஆம் வருடத்திய போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நடத்தை விதிகளில் விதி 26 B என்று ஒரு புதிய விதி சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்புதிய விதியின்படி எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தரும் வேலை நிறுத்தம் அல்லது அதைப்போன்ற காரியங்களிலே ஈடுபடவும் கூடாது; மற்றவர்களை ஈடுபடும்படி தூண்டிவிடவும் கூடாது. மேல் அதிகாரிகளையோ, சர்க்காரையோ, ஒரு காரியத்தைச் செய்யும்படி கட்டாயப்படுத்தும் எண்ணத்துடன் நடந்துகொள்ளுவதும், அதற்காக உண்ணாவிரதம் இருந்து காட்டுவதும் வேலை நிறுத்தத்தைப் போன்ற காரியமாகவே கருதப்படும்,

(21-4-1954 சென்னைச் சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்-பாகம் I பக்கம் 15.7 O. O.776.)

"லாட்ஜிங் ஹவுஸ்" அல்லது தங்கும் வசதியுள்ள இடங்களுக்கான பதிவுக் கட்டணம்

1939-ஆம் வருடத்திய சென்னைப் பொதுச் சுகாதாரச் சட்டத்தின் செக்ஷன் 103 (1) செக்ஷன் 128 (2) இவைகளில் கண்டிருக்கும் அதிகாரங்களை உபயோகித்துச் சென்னைச் சர்க்காரால் "லாட்ஜிங் ஹவுஸ்"களுக்கான "ரிஜிஸ்டர்" (பதிவுக்) கட்டணங்கள் 1-4-1954 முதல் அடியில்கண்ட விகிதப்படி இருக்கவேண்டுமென்று அது சம்பந்தமான விதி திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது,

A. சென்னை சிடியில்

“ஹோட்டலின் ஸைஸ்” என் மாத வாடகை அல்லது மாத வாடகை மதிப்பு அடியில் கண்டபடி இருந்தால்	ஹோட்டலின் ஸைஸுகளுக்கான ரிஜிஸ்ட்ரேஷன் கட்டணம்: சாப்பாட்டு வசதி இல்லாமலிருந்தால்	சாப்பாட்டு வசதியுடன் இருந்தால்
1 ரூ. 50ம் அதற்குக் கீழும்	ரூ. 20	ரூ. 60
2 ரூ. 50க்குமேல் ரூ. 100-க்கு மேற்படாமலிருந்தால்	ரூ. 50	ரூ. 150
3 ரூ. 100 ,, ரூ. 200 ,,	ரூ. 75	ரூ. 225
4 ரூ. 200 ,, ரூ. 400 ,,	ரூ. 100	ரூ. 300
5 ரூ. 400 ,, ரூ. 750 ,,	ரூ. 150	ரூ. 450
6 ரூ. 750 ,, ரூ. 1500 ,,	ரூ. 200	ரூ. 600
7 ரூ. 1500க்கு மேற்பட்டிருந்தால்	ரூ. 250	ரூ. 850

B. சென்னை தவிர மற்ற முனிசிபாலிடிகளிலும் வேறு இடங்களிலும்

1 ரூ. 20ம் அதற்குக் கீழும்	ரூ. 10	ரூ. 30
2 ரூ. 20க்கு மேற்பட்டு ரூ. 50க்கு மேற்படாமலிருந்தால்	ரூ. 20	ரூ. 60
3 ரூ. 50 ,, ரூ. 100 ,,	ரூ. 50	ரூ. 150
4 ரூ. 100 ,, ரூ. 200 ,,	ரூ. 75	ரூ. 225
5 ரூ. 200 ,, ரூ. 400 ,,	ரூ. 100	ரூ. 300
6 ரூ. 400க்குமேல் இருந்தால்	ரூ. 150	ரூ. 450

(G. O. 768—14-4-1954 சென்னை சர்க்கார் கெஜட் - ரூல் சப்ளிமெண்ட் - பாகம் I பக்கம் 43.)

மதிப்புரை

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினு-விடை

தஞ்சைக் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர் ஆசிரியர் ஸ்ரீ K. சீனிவாஸன் M.A. அவர்களைத் தென்னிந்தியக் கூட்டுறவு உலகத்திற்கு நன்ருகத்தெரியும். கூட்டுறவுச் சட்டஷாத்திக்களும் விதிகளும் விஷயவாரியாகவும் வினுவிடை முறையிலும் மிக எளிய தமிழ் நடையில் யாவருக்கும் விளங்கும்படி ஸ்ரீ. கே. சீனிவாஸன் அவர்கள் எழுதியுள்ள இப்புத்தகம் தமிழ் நாட்டின் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தினிடமும் ஒவ்வொரு அங்கத்தினரிடமும் அவசியமாக இருக்க வேண்டிய புத்தகமாகும். விலை ரூ 1-8-0 கிடைக்குமிடம் ஸ்ரீ K. சீனிவாஸன் M. A. ஹெட் கூட்டுறவு பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.

வெண்சங்கு நறுமணம்
குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No 13817
உரிமை:
S. பெத்தண்ண நாடார்
கீழவாசல்—தஞ்சாவூர்.
ஸ்ரீ சீயக்காய்த் தூள்

உ
ஸ்ரீ மகாலக்ஷ்மி துணை
திருக்காட்டுப்பள்ளியில்
பஸ் ஸ்டாண்டுக்குச் சமீபத்திலுள்ள
☞ திருச்சி கபே
ஹோட்டலில் கை தேர்ந்த
பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும்
இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும்.
டீ பார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு
ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை
செய்யப்படும். ஒருமுறை விஜயம்
செய்யவும்.

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

'எக்ரிமெண்ட்' எழுதப்பட்ட காகிதத்தின் இரண்டு ஓரங்களையும் கத்தரித்து எறிந்து விட்டு, அவன் மற்ற ஷரத்துக்களை வற்புறுத்த வாதிகள் தாவா செய்தனர்.

[ஆதாரம்;—1954 (1) மதராஸ் லா ஜர்னல் 451.)

கிருஷ்ணசாமி நாயுடு என்பவர் வாங்கி இருந்த ஒரு சொத்தை, அத்தர் ஜாமத் மஜூதி என்ற ஒரு முஸ்லீம் மதஸ்தாபனத்திற்கு ரூ. 7300க்குக் கிரய சாசனம் செய்து கொடுப்பதாக 15—12—1946ல் அவர் ஒரு 'எக்ரிமெண்ட்' (ஒப்பந்தம்) எழுதிக்கொடுத்திருந்தார். அட்வான்சாக அவர் ரூ. 1000 பெற்றுக் கொண்டிருந்தார். பாக்கி ரூ. 6300யும் அசல் பத்திரம் ரிஜிஸ்டராகும்போது சப்ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் பெற்றுக் கொள்வதாகவும் அதில் ஒப்புக் கொண்டிருந்தார். இந்த எக்ரிமெண்ட் ஒரு வெற்றுக்காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. கிருஷ்ணசாமி நாயுடு எக்ரிமெண்ட்டுப்படி பத்திரம் எழுதிக் கொடுக்கவில்லை. பாக்கிப் பணத்தை வாங்கிக் கொண்டு பத்திரத்தை எழுதிக் கொடுக்கும்படி அவருக்கு முஸ்லீம் மதஸ்தாபனத்தார் சார்பில் 10—1—1947ல் ஒரு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. இது திரும்பி வந்துவிட்டது. பிறகு கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு ஒரு தந்தியும் ஒரு ரிஜிஸ்டர் தபாலும் ஜனவரி மாதத்திலேயே அனுப்பப்பட்டன. ரிஜிஸ்டர் தபாலும் திரும்பி வந்துவிட்டது. ஆகையால் அத்தர் ஜமாத் மசூதியின் தலைவரும் காரியதரிசியும் வாதிகளாக இருந்து கிருஷ்ணசாமி நாயுடு பேரில் 16—10—1947ல் தாவா செய்தனர். எக்ரிமெண்ட்டுப்படி தங்களுக்குக் கிருஷ்ணசாமிநாயுடு பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தவே, இத்தாவா தொடரப்பட்டது.

இந்த தாவா கோர்ட்டில் தாகல் செய்த தினத்தன்று வாதிகள், எக்ரிமெண்டைக் கோர்ட்டில் தாகல் செய்யவில்லை. எக்ரிமெண்டைத் தாகல் செய்யும்படி பிராது வாப்ஸ் செய்யப்பட்டது. இப்படி ஒத்திக்கொண்டேபோய், கடைசியில், 23—12 —1947ல் தான் எக்ரிமெண்ட்டானது கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டது. அது வெற்றுக் காகிதத்தில் இருந்தமையால், ஸ்டாம்பு அபராதமும் செலுத்தப்பட்டது. பிரதிவாதி கிருஷ்ணசாமி நாயுடு ஆஜராகி, கட்சி சொன்னார். தம்மை வற்புறுத்தி நிர்ப்பந்தம் செய்து மஜூதிக்காரர்கள், இந்த எக்ரிமெண்டை வாங்கினார்களென்றும்; மேலும் எக்ரிமெண்ட்டுத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் சாசனம் வாங்கிக் கொள்ளத் தவறினால், சாசனம் வாங்குபவர் கொடுத்த அட்வான்சு ரூ. 1000ஐயும் இழப்பதுடன், எக்ரிமெண்டும் ரத்தாகி விடுமென்று ஒரு ஷரத்து அதில் எழுதப்பட்டிருந்தது என்றும், அந்த ஷரத்து இருந்த இடத்தைக் கத்தரித்து எரிந்து விட்டு வாதிகள் தாவா செய்திருப்பதாகவும் அவர் கட்சி சொன்னார். எக்ரிமெண்டு எழுதப்பட்டிருந்த வெற்றுக் காகிதத்தைப் பார்த்தாலே கிருஷ்ணசாமி நாயுடு சொல்லுவது சரி என்று விளங்கியது.

அக் காகிதத்தின் தலைப் பாகமும் அடிப்பாகமும் கத்தரிக்கோலால் கத்தரிக்கப்பட்டிருந்தது. அக்காகிதத்தின் முன்பக்கத்தின் கடைசியிலும், பின் பக்கத்தின் தலைப்பிலும் எழுதப்பட்டிருந்த விஷயங்களை மறைக்கவே இவ்விதம் செய்யப்பட்டிருந்தது நன்றாக விளங்கியது. கிழித்த பிறகு முதல் பக்கத்தின் கடைசியில் இருந்த வாக்யமும் இரண்டாவது பக்கத்தின் தலைப்பிலுள்ள வாக்கியமும் பொருந்துவதற்காக இரண்டு தமிழ் எழுத்துக்கள் வேறு மசியினால்

ஒட்டப்பட்டிருப்பதும் கண்ணுக்கு நன்றாகத் தெரிந்தன.

வாதிகள் இவ்விதம் செய்தது தவறாக இருப்பதுடன் இது ஒரு அசட்டுத்தனமான காரியம். எக்ரிமெண்ட்த் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அவர்கள் சாசனம் வாங்கிக்கொள்ளவேண்டுமென்ற ஷரத்து அதில் இருந்தாலும், அதன்படி அவர்கள் செய்யத்தான் தயாராக இருந்து கிருஷ்ணசாமி நாயுடுவுக்கு நோட்டீசும் கொடுத்திருக்கிறார்களே! பின் ஏன் இந்த ஷரத்தைக் கண்டு பயந்து போயினர்? அது எப்படி வேண்டுமானாலும் போகட்டும். வாதிகள் செய்த காரியத்தைப்பற்றிச் சட்டம் மிக வியக்தமாக இருக்கிறது. சட்டம் இதுதான். ஒரு பத்திரமோ தஸ்தவேஜியோ எழுதிக் கொடுக்கப்பட்ட பிறகு, அதை எழுதிக்கொடுத்தவருடைய சம்மதமில்லாமல், எழுதி வாங்கியவர் அதில் எவ்வித மாறுதல்கள் செய்தாலும், அதாவது எழுத்துக்களை அழித்தோ, அடித்தோ ஒட்டியோ, வேறுவிதமாகவோ அப்பத்திரத்தில் எவ்வித மாறுதல்களைச் செய்தாலும், அப்பத்திரமே செல்லாது. அப்படி மாற்றப்பட்ட பத்திரம் முற்றிலும் செல்லாது; உபயோகமற்றது.

சில வாக்கியங்களை கத்தரித்து எறியப்பட்ட இந்த எக்ரிமெண்டானது முற்றிலும் செல்லாமல் போயிற்று. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு தங்களுக்குக் கிருஷ்ணசாமி நாயுடுவானவர் சொத்தைக் கிரயம் செய்து கொடுக்க வேண்டுமென்று வாதிகள் கேட்கமுடியாமல் போயிற்று. கிருஷ்ணசாமி நாயுடு அட்வான்சாக வாங்கிக்கொண்ட ரூ. 1000த்தை மட்டில் வாதிகளுக்குத் திருப்பிக்கொடுக்கும்படி ஹைகோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டது. தங்களுக்குச் சொத்து கிரயம் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்ட வாதிகளின் பிராது தள்ளப்பட்டது. இந்த எக்ரிமெண்டை எழுதி வாங்கியவரும், வெட்டெழுத்து எழுதியவரும் கோர்ட்டில் பொய்ச் சாட்சி சொல்லிய குற்றத்திற்காக அவர்கள் மீது ஏன் கிரிமினல் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளக்கூடாதென்று கேட்டு அவர்களுக்கு ஹைகோர்ட்டால் நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

பத்திரங்களோ, தஸ்தவேஜுகளோ எழுதி வாங்கப்பட்ட பிறகு அதில் மாறுதல்களைச் செய்தால், அப்படிச் செய்வது குற்றமாவதுடன், அப்பத்திரம் அடியுடன் செல்லாமல் போய்விடும். திருத்தம் செய்தவர் அதை ஆதாரமாகக் கொண்டு எவ்வித பரிகாரமும் அடைய முடியாமல் போய்விடும்.

காட்டில் திரியும் பிராணிகளைக் கொன்று எடுத்துக் கொள்ளுவதும், அடைக்கப் படாத திறந்தவெளி நீர்த் தேக்கங்களிலுள்ள மீன்களைப் பிடிப்பதும் திருட்டு அல்ல, அவை ஒருவருடைய சுவாதீனத்திலும் இருப்பவை அல்ல.

[ஆதாரம்:—1954 (1) மதராஸ் லா ஜர்னல் 286.]

சென்னை கிண்டியிலிருக்கும் 'ராஜபவன்' என்ற அரசாங்கமாளிகையானது கவர்னர் அவர்களுடைய வாசஸ்தலமாகும். அதைச் சேர்ந்த காடு ஒன்று (ரிசர்வ் பாரஸ்டு) இருக்கிறது. இவை எல்லாம் சர்க்காருக்குச் சொந்தமானவை. அங்கே ஒருநாள் ஒரு துப்பாக்கிச் சப்தம் கேட்டது. காட்டில் காவலாளர்கள் ஓடிப்போய்ப் பார்த்ததில், பெருமாள் என்பவரும் அவருடன் மற்றும் இரண்டு நபர்களும் அக்காட்டில் திரிந்த புள்ளிமான் ஒன்றைக் கொன்று கொண்டிருந்தனர். மானைச் சுட்டுக் கொன்றது பெருமாளும் அவருடைய சகாக்களும்தான். அவர்களில் ஒருவர் ஓடிவிடவே பெருமாளும் அவருடனிருந்த மற்றொருவரும் அரஸ்டு செய்யப்பட்டனர்.

சர்க்காருடைய சுவாதீனத்திலுள்ள ஒரு மானை அவர்கள் திருடியதாக அவர்கள்மீது கிரிமினல் வழக்குத் தொடரப் பட்டது. வழக்கை விசாரித்த சைதாப்பேட்டை மாஜிஸ்ட்ரேட், எதிரிகளுக்கு நான்கு மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தார். எதிரிகள் தாங்கள் இம்மானை வேறுயாரிடமோ விலை கொடுத்து வாங்கியதாகக் கட்சி சொன்னார்கள். இக்கட்சியை மாஜிஸ்ட்ரேட் நம்பவில்லை. எதிரிகள் சென்னை ஹைகோர்ட்டுக்கு 'ரிவிஷன்' மனுக் கொடுத்தனர்.

காட்டில் திரிந்த மானைச் சுட்டுக் கொன்றது எதிரிகள்தான் என்ற முடிவை ஏற்றுக்கொண்ட உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள், இது திருட்டு அல்ல என்று தீர்ப்பளித்தனர்.

ஒருவருடைய சுவாதீனத்திலிருக்கும் பண்டத்தையோ, பிராணியையோ, கெட்ட எண்ணத்துடன் வேறு ஒருவர் எடுத்துக் கொள்ளுவதுதான் திருட்டுக் குற்றமாகும். ஒருவராலும் பழக்கப்படுத்தப்படாமல், இஷ்டம்போலக் காடுகளில் திரியும் மிருகங்கள் (Ferae Naturae) எவருடைய சுவாதீனத்திலும் இருப்பவை அல்ல. அதைப் போலவே திறந்தவெளியாகவும் அடைக்கப் படாமலும் இருக்கும் நீர்த்தேக்கங்களிலுள்ள மீனைப் பிடிப்பதும் திருட்டுக்குற்றமாகாதென்று சில நீதிபதிகள் அபிப்பிராயப்

பட்டிருக்கின்றனர். (15 கல்கத்தா — 388) அவ்வபிப்பிராயத்தை ஒட்டி உயர் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் இவ்வழக்கில் எதிரிகள் காட்டில் திரிந்த மானைச்சுட்டு எடுத்துக் கொண்டது திருட்டுக் குற்றமல்ல என அபிப்பிராயப்பட்டு எதிரிகள் அடைந்த தண்டனையை ரத்துச் செய்து எதிரிகளை விடுவித்தனர்.

குறிப்பு:— இவ்வழக்கில், எதிரிகள் மீது 'இந்தியன்பீனல்கோடு' என்ற குற்றங்களைப் பற்றிய பொதுச் சட்டத்தின் கீழ், அவர்கள் மானைத்திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டனர். இவர்கள் செய்த செய்கையானது அச்சட்டப்படித் திருட்டுக் குற்றமாகாதென்று உயர்நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் 'ரிசர்வ்' காடுகளைப்பற்றிய ஒரு தனிச் சட்டம் இருக்கிறது. அச்சட்டப்படி 'ரிசர்வ்' காடுகளில் உள்ளே போய்க் காட்டு மிருகங்களைச் சுடுவதை தடுக்கும் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. அச்சட்ட ஷரத்துக்களை மீறியதாக எதிரிகள்மீது வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டுமே ஒழிய, திருட்டுக் குற்றத்திற்காக வழக்குத் தொடர்ந்திருக்கக்கூடாதெனவும், உயர்நீதிபதி அவர்கள் தீர்ப்பில் எடுத்துக் காட்டி இருக்கின்றனர்.

சர்க்காரால் 'தர்காஸ்து' கொடுக்கப்பட்ட நிலமானது 'பெயர் இரவலாக' (பினாமியாக) வாங்கப்பட்டதென்று சொல்ல முடியுமா?

[ஆதாரம்:– 67 லா வீக்லி - 315.]

திருப்பூரைச் சேர்ந்த ராயபுரத்திலுள்ள ஒரு மனைக்கட்டும், அதில் கட்டப்பட்டிருக்கும் வீடு, கிணறும் தமக்குத்தான் சொந்தமான சொத்து என்று ஸ்தாபிக்க ஆறுமுக நாயக்கர் என்பவர் தாவா செய்தார். கணேச நாயக்கர் என்பவர் பேரில். திருப்பூரில் வேறு இடத்திலுள்ள சர்க்காருக்குச் சொந்தமான இடத்தைத் தமக்குக் கிரயம் செய்து கொடுக்கவேண்டுமென்று ஆறுமுக நாயக்கர் சர்க்காருக்கு ஒரு மனுப் போட்டிருந்தார். அம்மனு முடிவடையாமலிருக்கும்போது, திருப்பூரில் ராயபுரத்தில் பலகவி மனைக்கட்டுகள் சர்க்காரால் 'தர்காஸ்து' அதாவது இனாமாகக் கொடுக்கப்பட்டுவருவது ஆறுமுக நாயக்கருக்குத் தெரியவந்தது. அதற்கும் தாமே மனுப்போட்டு இரண்டு இடங்களிலும் ஒருவரே மனைக்கட்டுக்களைக் கேட்டால் கிடைக்காதென்று பயந்து, ஆறுமுக நாயக்கர் தம்முடைய சகோதரி மகனான கணேச நாயக்கரைக் கொண்டு சர்க்காருக்கு 'தர்காஸ்து'க்காக மனுப்போடச் செய்தார். கடைசியில் 1931 ல் கணேச நாயக்கருக்கு இந்த மனைக்கட்டானது சர்க்காரால் 'தர்காஸ்து' தாகக் கொடுக்கப் பட்டது. பிறகு அம்மனைக்கட்டில் ஆறுமுக நாயக்கரே தம்முடைய பணத்தைக்கொண்டு ஒரு கேணி இறக்கி ஒரு வீடும் கட்டினார். அந்த வீட்டிற்குள்ள முனிசிபல் வரி முதலியவைகளைத் தாமே செலுத்திக் கொண்டு தாமே அதை அனுபவித்தும் வந்திருக்கிறார். மனைக்கட்டானது கணேச நாயக்கர் பெயரில் சர்க்காரால் தர்காஸ்து கொடுக்கப் பட்டிருந்தாலும், அது தமக்காகப் பெயர் இரவலாக (பினாமியாக) த்தான் கொடுக்கப்பட்டதென்றும், மனைக்கட்டுக்கும் வீட்டிற்கும் தாம் தான் உண்மையான சொந்தக்காரர் என்றும் ஊர்ஜிதம் செய்யவேண்டுமென்று ஆறுமுக நாயக்கர் தாவாவில் கேட்டிருந்தார். சில காலமாகக் கணேச நாயக்கர் இம்மனைக்கட்டிலும் வீட்டிலும் தமக்குப் பாத்திய மிருப்பதுபோல் சொல்லிக் கொள்ளுவதால் இத் தாவா செய்ததாகவும் கண்டிருந்தார்.

பிரதிவாதி, கணேச நாயக்கர் வாதி சொல்லியதை ஒப்புக் கொள்ளவில்லை. வாதிக்காகத் தாம் பெயர் இரவலாகத் தர்காஸ்து வாங்கவில்லை என்றும், அதில் வீடு கிணறு கட்டியதும் தம்முடைய பணத்தைக் கொண்டுதான் என்றும்; ஆனால் வாதி தமக்கு நெருங்கிய உறவினராக இருந்தமையால் அச்சொத்தைத் தமக்காக அவர் மேற்பார்வை பார்த்து வந்ததைத் தவிர, அவருக்கு வேறு எவ்விதப் பாத்தியமுமில்லை என்றும் கட்சி சொன்னார்.

இவ்வழக்கை முதலில் விசாரித்த டிஸ்டிரிக்ட் முன்சீப் அவர்கள், பிராதில் கண்ட கீழ் ஸ்தலமானது கணேச நாயக்கருக்குத்தான் சொந்தமென்றும்; ஆனால் அதில் ஆறுமுக நாயக்கர் தான் பணம் செலவு செய்து வீடு கட்டியிருக்கிறார் என்றும் அபிப்பிராயப்பட்டு அவர் வீட்டிற்காகச் செலவு செய்த ரூ. 1000 மும் அச்சொத்தின் ஜாமீன் ஜவாப்தாரியின் பேரில் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டிய தொகையாகு மென்றும் தீர்ப்புச் செய்தார். ஆறுமுக நாயக்கருடைய கட்சியை ஏற்றுக் கொண்டால், பொய் சொல்லி, சர்க்காரை ஏமாற்றி வேறு ஒருவர் பெயரில் தாம் தர்காஸ்து எடுத்ததை அனுமதிப்பதாகும்; ஆகையால் அவ்விதக் கட்சியைச் சொல்ல ஆறுமுக நாயக்கர் தடைப்பட்டிருப்பதாக முன்சீப் அபிப்பிராயப்பட்டார்.

அத்தீர்ப்பின் பேரில் இருவரும் தனித் தனியாக, சப்கோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். சப்ஜட்ஜ் அவர்கள் வேறுவிதமாக அபிப்பிராயப்பட்டார். ஆறுமுக நாயக்கர் தான் கீழ் நிலத்தையும் கணேச நாயக்கரைக்கொண்டு சர்க்காரிடம் பெயர் இரவலாகத் தர்காஸ்து எடுத்திருக்கிறார்

18773

என்றும்; ஆகையால் கீழ் நிலமும் சரி, வீடும் சரி, அவருக்குத்தான் சொந்தமென்றும் அவர் தீர்ப்பளித்தார்.

கணேச நாயக்கர் அத்தீர்ப்பின் பேரில் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்தார். சப்ஜட்ஜின் தீர்ப்பு ஹைகோர்ட்டால் மாற்றப்பட்டது. 'பினாமி' அல்லது பெயர் இரவல் சம்பந்தமான சட்டமானது, இரண்டு உயர் நீதிபதிசளால் இத்தீர்ப்பில் விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு சொத்தை வாங்குவதற்குப் பணமோ அல்லது பிரதிப் பிரயோஜனமோ கொடுப்பவர் அச்சொத்தைத் தம்முடைய பெயரில் வாங்கிக் கொள்ளாமல், வேறு ஒருவருடைய பெயரில் வாங்குவதற்குத்தான் 'பெயர் இரவல்' (அல்லது இந்துஸ்தானியில் 'பினாமி') என்று சொல்லுவது. ஆகையால் பணமோ பிரதிப் பிரயோஜனமோ ஒன்றுமில்லாமல் இனாமாக அடையக் கூடிய சொத்துக்களைப் பொறுத்து, ஒருவர் மற்றொருவருக்குப் பெயர் இரவலாக அடைவது என்று சொல்லுவது பொருந்தாது. 'தர்காஸ்து' என்பது சர்க்காரால் ஒருவருக்கு இனாமாக, யாதொரு பிரதிப் பிரயோஜனமுமில்லாமல் கொடுக்கப்படும் சொத்தாகும். யாருக்குத் தர்காஸ்து அளிக்கப்படுகிறதோ அவரேதான் அச்சொத்தின் உண்மையான சொந்தக்காரர். வேறு ஒருவரும் அதில் பாத்தியம் கொண்டாட இடமில்லை. ஏனென்றால் வேறு ஒருவரும் இச்சொத்தை வாங்குவதற்குப் பணமோ, பிரதிப் பிரயோஜனமோ கொடுக்கவில்லை. இத்தாவாஸ்தலத்தை கணேச நாயக்கர் சர்க்காரிடமிருந்து தர்காஸ்து வாங்கியதற்கு ஆறுமுக நாயக்கர் யாதொரு பணமும் கொடுக்கவில்லை. அப்படி இருந்தும் தாம்தான் அச்சொத்தைக் கணேச நாயக்கர் பெயரில் தர்காஸ்து எடுத்ததாகச் சொல்லுவதற்கு அர்த்தமில்லை. தர்காஸ்து என்பது சர்க்காரால் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ, சொத்து அவருடையதேயாகும். ஆகையால் இம்மனையானது வாதிக்குச் சொந்தமென்று ஊர்ஜிதம் செய்யச் சட்டம் இடம் கொடுக்காதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு வாதியின் தாவா தள்ளப்பட்டது. ஆனால் அம்மனைக்கட்டிவிருக்கும் வீடும் கிணறும் வாதி கட்டியதே. அவை அவருக்குச் சொந்தமானவையாக இருந்தாலும் அது சம்பந்தமாக வாதிக்குத் தாவா சொத்தின் பேரில் ஜாமீன் பாத்தியமிருப்பதாக பிரஸ்தாப தாவாவில் யாதொரு பரிகாரமும் அளிக்க இடமில்லை என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

சர்க்காரால் தர்காஸ்து கொடுக்கப்படும் சொத்துக்களைப் பற்றி 'பெயர் இரவல்' என்று வேறு நபர்கள் தங்கள் பாத்தியங்களை ஸ்தாபிக்க இடம் கொடுப்பதானது விபரீதமான விளைவுகளை உண்டாக்கக் கூடுமென்பதையும் உயர் நீதிபதிகள் இத்தீர்ப்பில் எடுத்துக் காட்டி இருக்கின்றனர். உதாரணமாக, சர்க்காரால் ஹரிஜனங்களுக்கு நிலங்கள் தர்காஸ்தில் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவைகளை ஒருவர் பெயர் இரவலாக அடைய இடங்கொடுத்தால், பணக்காரர்கள், ஹரிஜனங்களைக் கொண்டு பெயர் இரவலாக இந்நிலங்களைத் தர்காஸ்தில் எடுத்து, பிரகு தாங்களே அவற்றிற்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லி விடுவது சாத்தியமாகும். இது சர்க்காரின் எண்ணங்களையும் கொள்கைகளையும் வீணாக்கிவிடும், என்பதையும் உயர்நீதிபதிகள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

விற்பனைவரிச் சட்டம். ஸ்தாவர சொத்து சம்பந்தமாய் "ஒப்பந்த வேலை" (Works-contract) பற்றிய ஷரத்து செல்லாது. சென்னை ஹைகோர்ட்டின் தீர்ப்பு. சிப்பந்திகளின் சௌகரியத்திற்காக நடத்தப்படும் 'காண்டீன்'களுக்கும் விற்பனைவரி விதிக்க முடியாது.

சென்ற 6-4-1954ல் சென்னை ஹைகோர்ட் உயர்நீதிபதி சத்திய நாராயணா அவர்களும் உயர் நீதிபதி ராஜகோபாலன் அவர்களும் விற்பனை வரிச்சட்ட சம்பந்தமாய் ஒருமுக்கியமான தீர்ப்பு அளித்தனர். சென்னை விற்பனை வரிச்சட்டமானது 1947ல் ஒருதடவை திருத்தி அமைக்கப்பட்டது. "விற்பனை" (Sale) என்ற வார்த்தைக்கு முதலில் ஒரு அர்த்தம் சொல்லப்பட்டிருந்தது. அதாவது வியாபாரத்தில் ஜங்கம சொத்துக்களின் பாத்தியமானது, ஒருவரிடமிருந்து வேறு ஒருவருக்கு மாற்றப்படுவதுதான் "விற்பனை" என்று செக்ஷன் 2 (H) என்ற ஷரத்தில் விளக்கப் பட்டிருந்தது. 1947ல் எற்பட்ட திருத்தத்தால் இத்துடன் வேறு ஒரு விஷயமும் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதாவது ஒருவர் "ஒப்பந்தவேலை"கள் (Works contract) செய்து கொடுப்பதில் உபயோகிக்கப்படும் ஜங்கமசொத்துக்களின் பாத்தியம் மாற்றப்படுவதும் "விற்பனை" தான் என்று சேர்த்துக் கொள்ளப்பட்டது. "ஒப்பந்தவேலை" என்றால் என்ன என்று அர்த்தம் செல்லும் ஒருதனி ஷரத்தும் (செக்ஷன் 2 (II)) 1947ல் விற்பனை வரிச்சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதாவது கட்டடங்கள், ரஸ்தாக்கள், பாலங்கள், அல்லது வேறு ஸ்தாவரசொத்துக்களைக் கட்டிக் கொடுக்கவோ, மராமத்துச் செய்யவோ, பழுது

பார்த்துக் கொடுக்கவோ செய்துகொள்ளும் ஒப்பந்தங்களும், ஜங்கம சொத்துக்களை அமைத்துக் கொடுக்கவோ அபிவிருத்தி செய்துகொடுக்கவோ, பழுதுபார்த்துக் கொடுக்கவோ செய்து கொள்ளும் ஒப்பந்தங்களும் "ஒப்பந்த வேலைகள்" என விளக்கப்பட்டது. இவ்வேலைகளில் உபயோகிக்கப்படும் ஜங்கம சொத்துக்களை, ஒப்பந்த வேலை செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டவர் 'விற்பனை' செய்வதாகப் பாவித்து-அவ்விற்பனைகளுக்கு விற்பனை வரிவிதிக்கப்பட்டது. உதாரணமாக, ஒரு வீடு அல்லது கட்டடம் கட்டிக் கொடுப்பதாகஒப்புக்கொள்ளும் கண்டிராக்டர்ஒருவர் அதில் உபயோகிக்கும், கல், சிமிண்டு, மரம், இரும்பு, ஆணி இவைகளை "விற்பனை" செய்வதாகப் பாவித்து, அவருக்கு விற்பனைவரி விதிக்க இத்திருத்தச் சட்டமானது இடம் கொடுத்தது.

ஜங்கம சொத்துக்களின் விற்பனைகளுக்கு விற்பனைவரி விதிக்கத்தான், ராஜ்ய அரசாங்கங்களுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறதென்றும்; ஸ்தாவரசொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் "ஒப்பந்தவேலை"களை ஜங்கமசொத்து விற்பனையாகப் பாவித்து அதற்கு விற்பனைவரி போட ராஜ்ய சட்ட சபைகளுக்கே அதிகாரமில்லை என்றும் ஆகையால் மேற்கண்ட ஷரத்துக்கள் ஸ்தாவர சொத்துவேலைகள் சம்பந்தபட்ட வரையில் செல்லாதென உயர்நீதிபதிகள் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டனர்.

பிரஸ்தாப வழக்கில், கானன் டங்கர்லி என்ற கண்ட்ராக்ட் வேலை செய்யும் பிரபல கம்பெனியாருக்கு 1951-ஆம் வருடத்தில் மொத்த வியாபாரம் 35 லக்ஷ ரூபாயாக கணக்குச் செய்யப்பட்டு அதற்கு விற்பனைவரி விதிக்கப்பட்டது. விற்பனைவரி அதிகாரியின் வரி விதிப்பை டிரிபுனல் கோர்ட்டார் உறுதி செய்தனர். அதன்பேரில் அக் கம்பெனியார் சென்னை ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் மனுக்கொடுத்தனர். இக் கம்பெனியார் பல வாடிக்கைக்காரர்களுக்கு, முக்கியமாக மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் பல கட்டடவேலைகள், ரஸ்தா, பாலம் முதலியவை பற்றிய வேலைகளைச் செய்துகொடுப்பவர்கள். இதுதவிர அவர்களிடம் வேலைசெய்யும் சிப்பந்திகளின் சௌகரியத்திற்காக உணவு தானியங்களை வாங்கிக் கொடுத்து அதன் கிரயத்தை அவர்களுடைய கூலியில் பிடித்துக்கொண்டு வந்தனர். மேலும் வேலை செய்யும் தொழிலாளர்கள் சாப்பிடவும் சிற்றுண்டி அருந்தவும் 'காண்டீன்கள்' என்ற போஜனசாலைகள் நடத்திவந்தனர். இவைகளில் அவர்களுக்கு லாபம் ஒன்றுமில்லை. சிப்பந்திகளின் சௌகரியத்திற்காகவே இவ்விதம் நடத்தி வந்தனர்.

இவர்கள் செய்த கட்டடவேலைகளையும் சரி; இவர்கள் சிப்பந்திகளுக்குக் கொடுத்த உணவு தானியம், உணவு இவைகளையும்சரி "விற்பனை"யாகக்கருதி இவர்களுக்கு விற்பனைவரி விதிக்கப்பட்டிருந்தது. இவை ஒன்றுக்கும் அக்கம்பெனியார் விற்பனைவரி கொடுக்கவேண்டியதில்லை என்று உயர்நீதிபதிகள் இவ்வழக்கில் தீர்ப்பளித்தனர். ஸ்தாவர சொத்து வேலைகள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளை அக்கக்காகப் பிரித்து அவ்வேலைகளில் உபயோகிக்கப்படும் ஜங்கம சொத்து விற்பனைக்கு வரிவிதிக்கச் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றும்; உணவுதானியம் உணவு இவைகளில் அக் கம்பெனியார் லாபத்துக்காக வியாபாரம் ஒன்றும் செய்யவில்லையாகையால் அவைகளுக்கு விற்பனைவரி விதிக்க முடியாதென்றும் உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சந்தாதாருடைய விலாசமும் சரிபார்த்து அனுப்பப்படுவதால் தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 10 நாட்களுக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும். சந்தா முடிந்தவர்கள் புதிய சந்தா அனுப்பிய பிறகே அவர்களுக்குப் பத்திரிகை அனுப்பபடும். வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தாத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர் செய்து அனுப்பலாம். சந்தா விபரமும், விளம்பர விகிதமும் முன் அட்டைப் பக்கத்தில் இருப்பதைக் கவனிக்கவும்.

சென்ற இதழ் தொடர்ச்சி.

தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச் சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

காண்டீன் அல்லது சிற்றுண்டிச் சாலைகள்

செக்ஷன் 46
விதிகள் 65-71

சாதாரணமாய்க் குறைந்தது 250 தொழிலாளர்களாவது வேலை செய்துவரும் குறிப்பிட்ட தொழிற்சாலை ஒவ்வொன்றிலும் தொழிலாளர்களின் உபயோகத்திற்காக ஒரு காண்டீன் என்ற சிற்றுண்டிச்சாலை அமைத்துப் பராமரிப்பது தொழிற்சாலை ஆட்சியாளரின் கடமையாகும். இச் சிற்றுண்டிச்சாலைகளின் அமைப்பு நிர்வாகம் முதலியவை பற்றி 65 முதல் 71 வரையுள்ள விதிகள் விவரமாய்க் கூறுகின்றன.

சிற்றுண்டிச்சாலையில் விற்கப்படும் உணவு, பானம் முதலியவை லாபத்திற்காக விற்கப்படக் கூடாது. அதில் விற்கப்படும் பண்டங்களின் விலையை காண்டீன் மானேஜிங் கமிட்டி அங்கீகாரம் செய்ய வேண்டும். இந்தக் கமிட்டியில் நிர்வாகஸ்தர்களால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் எவ்வளவு பெயர்களோ அவ்வளவு பெயர்கள் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஆனால் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 2-க்குக் குறையாமலும், 5-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஒரு ஆயிரம் தொழிலாளர்களுக்கு ஒரு பிரதிநிதி வீதம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சிற்றுண்டிச் சாலையில் கொடுக்கப்பட வேண்டிய உணவு எவ்வளவு, எவ்விதம் இருக்க வேண்டும், என்ன என்ன தயார் செய்ய வேண்டும் என்றும் இக் கமிட்டியை அவ்வப்பொழுது கலந்து நடத்த வேண்டும். 'காண்டீன்' சம்பந்தமான விதிகள் எல்லாம் எந்த வகைத் தொழிற்சாலைகளுக்கு எந்தத் தேதி முதல் அமுலுக்கு வருமென்று கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிட ராஜ்ய சர்க்காருக்கு விதி 65-ஆல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நிழலில் இருப்பிடம்—ஓய்வு அறைகள்—சிற்றுண்டி அறைகள்.

செக்ஷன் 47
விதி 72

சாதாரணமாய் 150 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில், போதுமான நிழல் இருப்பிடங்களும் ஓய்வு எடுத்துக் கொள்ள அறைகளும், தொழிலாளர்கள் கொண்டு வரும் உணவை வைத்துக்கொண்டு சாப்பிட வசதியுள்ள அளவுகள் அவைகளில் குடி தண்ணீர் வசதிகளும் செய்யப்பட வேண்டும். காண்டீன்கள் இருக்கும் தொழிற்சாலைகளில் உணவு அருந்தத் தனி அறை வேண்டியதில்லை. இவ்விதம் உணவு அருந்தத் தனி அறைகள் இருக்கும் தொழிற்சாலைகளில் எந்தத் தொழிலாளரும் வேலை செய்யுமிடங்களில் உணவு அருந்தக் கூடாது. மேற் கண்ட இடங்களும் அறைகளும் நல்ல வெளிச்சம் காற்று உள்ளதாயும் சுத்தமாயும் குளிர்ச்சியாகவும் வைத்துக் கொள்ளப் பட வேண்டும். இவை எப்படி இருக்க வேண்டுமென்ற விவரங்கள் விதி 72-ல் விவரிக்கப் பட்டிருக்கிறது.

கைக்குழந்தைகளுக்கான தனி இடம்

செக்ஷன் 48
விதி 73

சாதாரணமாய் 50 ஸ்திரீகளுக்கு மேல் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அவர்களுடைய 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இருக்கத் தனி அறைகள் ஏற்படுத்தப் பட வேண்டும். இவைகள் போதுமான இடவசதிகள் உள்ளனவாகவும், நல்ல

வெளிச்சம் காற்றுடன் கூடினவையாகவும், சுத்தமாயும் சுகாதார விதிகளின்படிக்கும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். குழந்தைகளைக் கவனிக்கப் பயிற்சி பெற்ற ஒரு ஸ்த்ரீயின் மேற்பார்வையில் இந்த அறைகள் இருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கட்டில் அல்லது தொட்டிலாவது அவசியமான படுக்கைகளுடன் இருக்க வேண்டும். தாயார் உட்கார்ந்து குழந்தைக்கு உணவு கொடுக்கவும் குழந்தையைக் கவனிக்கவும் நாற்காலிகள் அல்லது பெஞ்சுகள் போன்ற சாதனங்கள் இருக்க வேண்டும். கொஞ்சம் பெரிய குழந்தைகளுக்காக அவர்களுக் கேற்ற விளையாட்டுச் சாமான்கள் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

குழந்தைகளையும் அவர்களுடைய துணிமணிகளையும் கழுவ, பக்கத்தில் தனி அறை இருக்க வேண்டும். அங்கிருக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் தினம் குறைந்தது 6 அவுன்ஸ் சுத்தமான பால் உபயோகிக்கத் தக்கதாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். வேலை செய்யும் தாயாருக்கு குழந்தைக்கு உணவு கொடுக்கப் போதுமான இடை வேளை அளிக்க வேண்டும். இரண்டு வயதுக்கு மேல் உள்ள குழந்தைகளுக்கு போதுமான ஆரோக்யமான திண்பண்டங்கள் கொடுக்கப்பட வேண்டும். பெரிய குழந்தைகள் விளையாட நிழலான திறந்த தனி இடங்கள் வேலி அடைத்து இருக்க வேண்டும்.

தொழிலாளர்களின் சுக சௌக்கியங்களைக் கவனிக்க உத்தியோகஸ்தர்கள்

செக்ஷன் 49

சாதாரணமாய் 500 தொழிலாளர்கள் அல்லது அதற்கு மேலே வேலை செய்யும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுடைய சுக சௌக்கியங்களைக் கவனிக்கப் போதுமான உத்தியோகஸ்தர்கள் (Welfare Officers) அமர்த்தப்பட வேண்டும். இவர்களுடைய யோக்கியதாம்சங்கள், வேலை முதலிய விஷயங்களைப் பற்றி விதிகள் செய்ய ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

தேவையான விதி விலக்குகள் அளிக்கவும் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

வயது வந்த தொழிலாளர்களின் (Adults) வேலை நேரம்

"வயது வந்தவர்" (Adult) என்றால் 18 வயது பூர்த்தியாகிய ஒருவரைக் குறிக்கும் என்பதை முன்பே கவனித்தோம்.

செக்ஷன் 51

வயது வந்த தொழிலாளர்களுடைய வேலை நேரத்தைப் பற்றிய ஷரத்துக்கள் பின் வருமாறு:—எந்தத் தொழிற் சாலையிலும் ஒரு வயது வந்த தொழிலாளரை, ஒரு வாரத்தில் 48 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும்படி சொல்லவும், அனுமதிக்கவும் கூடாது.

ஒரு வாரத்தின் முதல் நாளில் ஒரு வயது வந்த தொழிலாளரை வேலை செய்யும்படி சொல்லவும் அனுமதிக்கவும் கூடாது.

செக்ஷன் 52

வாரம் என்பது சனிக்கிழமை நடு இரவு முதல் ஆரம்பிக்கும் ஏழு நாட்கள் என்பதைக் கவனித்தோம். ஆகையால் வாரத்தின் முதல் நாள் என்பது ஞாயிற்றுக் கிழமையைத் தான் குறிக்கும். ஆனால் வேறு கிழமை முதலும் 'வாரம்' என்பது கணக்குச் செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிட, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. 'வாரம்' என்பது எந்தக் கிழமையிலிருந்து கணக்குச் செய்யப்பட்டாலும் அதன் முதல் நாளில் ஒரு தொழிலாளரை வேலை செய்யச் சொல்லவும் அனுமதிக்கவும் கூடாது. ஆனால் பாக்டரி இன்ஸ்பெக்டருக்குத் தொழிற்சாலையின் மானேஜர் ஒரு நோட்டீஸ் கொடுத்துவிட்டு வேறு ஒரு தினத்தில் விடுமுறை விடலாம். இவ்விதம் மாற்றப்படும் தினம் ஞாயிற்றுக் கிழமை (அல்லது வாரத்தின் முதல் தினத்திற்கு) முன் அல்லது பின் உள்ள 3 நாட்களுக்குள் இருக்க வேண்டும். முன் 3 நாட்களுக்குள் இப்படி மாற்றப்படும் விடுமுறை நாள் இருந்தால் அதற்கு முன்பே மேற்கண்டபடி இன்ஸ்பெக்டருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். பின் 3 தினங்களுக்குள் இருந்தால் ஞாயிற்றுக் கிழமை அல்லது வாரத்தின் முதல் தினத்திற்கு முன்பே மேற்கண்ட நோட்டீஸ் கொடுக்கப்பட வேண்டும். மேற்கண்ட நோட்டீஸ் தொழிற்சாலையிலும் ஒட்டப்பட வேண்டும். இவ்விதம் விடுமுறை நாளை மாற்றுவதில், எந்தத் தொழிலாளரும் தொடர்ந்து 10 நாட்களுக்கு மேல் வேலை செய்யாதபடி பார்த்து மாற்ற வேண்டும். விடுமுறை நாளை மாற்றித் தெரிவிக்கும் நோட்டீசையும் முன் கூட்டியே ரத்துச் செய்தும் கொள்ளலாம். இப்படி ரத்துச் செய்ததையும் இன்ஸ்பெக்டருக்கு விடுமுறை நாளுக்கு முன்பே தெரிவிக்க வேண்டும். வாரத்தின் முதல் நாளைக்கு முன்பே விடுமுறை கொடுக்கப்பட்டு முதல் நாளில் ஒரு தொழிலாளர் மேற் கண்டவிதம் வேலை செய்தால் இப்படி வேலை செய்யும் தினத்தை முந்திய வாரத்துடன் சேர்த்துக் கொண்டு வேலை மணி நேரம் கணக்குச் செய்ய வேண்டும்.

மேற்கண்ட வார விடுமுறையை குறிக்கும் விதியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும்

பதில் விடுமுறை நாட்கள் செக்ஷன் 53 விதி 77

தொழிற்சாலைகளில் ஒரு தொழிலாளர் வார விடுமுறை நாட்களை இழக்க நேரிட்டால், அப்படி இழந்த விடுமுறை நாட்களுக்குப் பதிலாக அதே மாதத்திலோ, அடுத்த இரண்டு மாதங்களுக்குள்ளோ அவருக்கு விடுமுறை நாட்கள் அளிக்க வேண்டும். எவ்வளவு நாட்கள் இழக்கப்பட்டதோ அவ்வளவு நாட்கள் மேற் கண்ட கெடுவுக்குள் பதில் விடுமுறை நாட்கள் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் இப்படி பதிலுக்குக் கொடுக்கப்படும் விடுமுறை நாட்கள் ஒரே வாரத்தில் இரண்டு நாட்களுக்கு மேல் சேர்ந்திருக்கக்கூடாது. இப்படி இழந்த விடுமுறை நாட்களுக்குப் பதிலாகக் கொடுக்கப்படும் விடுமுறை நாட்களைத் தொழிற்சாலை நோட்டீஸ் போர்டில் தொழிற்சாலை மானேஜர் விளம்பரம் செய்ய வேண்டும். தவிர இதற்காக நமூனா 9-ன்படி தொழிற்சாலை மானேஜர் ஒரு ரிஜிஸ்டரும் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த ரிஜிஸ்டருக்குப் பதிலாக 'மஸ்டர்ரோல்' அல்லது வேறு ரிஜிஸ்டர்களோ இருந்தால் போதுமென்று சீப் இன்ஸ்பெக்டர் விதி விலக்கு அளிக்கலாம். மேற்கண்ட நமூனா 9 அல்லது அதற்குப் பதிலாக வைக்கப்படும் ரிஜிஸ்டர்கள் அதன் கடைசி பதிவுத் தேதியிலிருந்து 3 வருடங்கள் முடியும் வரை ஜாக்கிரதையாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும். மேலும் இந்த ரிஜிஸ்டரை இன்ஸ்பெக்டர் கேட்கும் போது தாகல் செய்ய வேண்டும்.

தினசரி வேலை நேரம்

செக்ஷன் 54

ஒரு தினத்தில் 9 மணி நேரத்திற்கு மேல் எந்தத் தொழிற்சாலையிலும் ஒரு வயது வந்த தொழிலாளரை வேலை செய்யும்படி சொல்லவும் அனுமதிக்கவும் கூடாது. வாரத்தில் மொத்தமாக 48 மணிக்கு மேல் வேலை இருக்கக் கூடாது என்ற முன்பு சொல்லப்பட்ட ஷரத்துக் குட்பட்டே இந்த விதியின் படியும் இருக்க வேண்டும்.

இளைப்பாற இடைவேளை

செக்ஷன் 55

எந்தத் தொழிற்சாலையிலும் ஒரு தொழிலாளர் தொடர்ந்த 5 மணி நேரங்களுக்கு மேல் வேலை செய்யக்கூடாது. 5 மணிக்குத் தொடர்ந்து வேலை செய்த ஒரு தொழிலாளருக்கு இளைப்பாற குறைந்தது அரை மணி நேரமாவது இடைவேளை கொடுத்த பிறகு தான் மறுபடி வேலை ஆரம்பிக்க வேண்டும்.

வேலை நேர அமைப்பு

செக்ஷன் 56

ஒரு தொழிலாளர் வேலை செய்யும் நேரம் இடைவேளை எல்லாம் சேர்ந்து ஒரு தொடர்ந்த 10½ மணி நேரங்களுக்குள் இருக்கும்படி வேலை நேரம் அமைக்கப்பட வேண்டும். ஆனால் இதை 12 மணி நேரத்திற்குள் அமைத்துக் கொள்ளலாமென்று விதி விலக்கு அளிக்க, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு.

இரவில் 'ஷிப்ட்' வேலை செய்பவர்களுக்கு வார விடுமுறை நாள்

செக்ஷன் 57

இரவில் 'ஷிப்ட்' ஆக வேலை செய்யும் ஒரு தொழிலாளர் நடு நிசிக்குப் பின்பும் வேலை செய்தால், வேலை முடிந்த நேரத்திலிருந்து தொடர்ந்த 24 மணி நேரத்தை ஒரு தினமாகக் கணக்கு செய்து அவருக்கு வார விடுமுறை தினம் அளிக்கவேண்டும். சாதாரணமாக, இச் சட்டப்படி 'தினம்' அல்லது 'நாள்' என்று நடு இரவு முதல் கணக்குச் செய்யப்பட்டாலும், அந் நேரத்திற்கு மேலும் வேலை நேரம் நீடிக்கும் இரவு வேலைக்காரர்களுக்கு மட்டில் நடு இரவுக்குப் பின்பும் அவர்கள் செய்யும் வேலை நேரம் முந்திய தினத்துடன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அவருக்கு மட்டில் 'அடுத்தநாள்' என்று அவருடைய இரவு 'ஷிப்ட்' முடிந்த பின் உள்ள தொடர்ந்த 24 மணி நேரத்தையே குறிக்கும்.

ஒரு 'ஷிப்ட்' முடிந்த பின்பு தான் அடுத்த 'ஷிப்ட்' ஆரம்பிக்க வேண்டும்

செக்ஷன் 58 விதி 77A

தொழிலாளர்களை மாற்றி மாற்றித் தொடர்ந்து வேலை செய்யப்படும் தொழிற்சாலைகளில், அதாவது 'ஷிப்ட்' முறைப்படி வேலை நடத்தப்படும் தொழிற்சாலைகளில், ஒரே சமயத்தில் ஒரே விதமான வேலையில் ஒரு 'ஷிப்ட்' தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்ய ஏற்பாடு செய்யக்கூடாது. அதாவது ஒரு 'ஷிப்ட்'டைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை நிறுத்துவதற்குள் புதிய 'ஷிப்ட்' தொழிலாளர்களுடைய வேலை நேரம் ஆரம்பிக்கக் கூடாது. ஆனால் இந்த விதிக்கு விதி 77A-ன் படி சில விதி விலக்குகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

(தொடரும்)

கேள்வியும் பதிலும்

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுதஇடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

கைத்தறி ஜவுளி விற்பனைக்கு விற்பனை வரி விதி விலக்குப் பற்றிய சந்தேகங்கள்

59. கேள்வி: (T. K. பாலசாமி அய்யர்—கௌரவ காரியதரிசி—மதுரை கைத்தறி ஜவுளி வியாபாரிகள் சங்கம்) விற்பனை வரிச் சட்டத்திலிருந்தும் பின்னர் ஏற்பட்ட உபவிதிகளிலிருந்தும் 1-4-1954 முதல் கைத்தறி ஜவுளியின் எல்லா விற்பனைக்கும் விதிவிலக்குச் செய்து 7-4-1954 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரமாகி இருக்கிறது. 1939-ஆம் வருட விற்பனை வரிச்சட்டம், உபவிதிகள் இவைகளில் எந்தெந்த செக்ஷன்களிலிருந்து கைத்தறி ஜவுளித் தொழிலுக்கு விதிவிலக்குச் செய்திருக்கின்றனர்? இதை அதிகார பூர்வமாக நாம் தெரிந்து கொள்ள யாருக்கு எழுதிக் கேட்கவேண்டும். இதுவரை ரூ. 6 பணம் கட்டி 'வியாபாரி' என்று பதிவு செய்துகொண்டு வந்திருக்கிறோம். இனியும் ரூ. 6 செலுத்தி வியாபாரி என்று பதிவு செய்துகொள்ள வேண்டுமா இல்லையா?

பதில்: குறிப்பிட்ட சரக்குகளுக்கு விற்பனை வரி கிடையாதென்றோ, வரி விகிதம் குறைக்கப்பட் டிருக்கிறதென்றோ அறிக்கை மூலம் விதிவிலக்கு அளிக்க விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 6 (1)ல் ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை அனுசரித்துத்தான் 1-4-1954 முதல் கைத்தறி ஜவுளி விற்பனைக்கு அத்தறுதியாக வரியே கிடையாதென்று நமது சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனர். விதி விலக்கு அளிக்கும்போது 'லைசென்சு' வாங்கிக் கொண்டவர்களுக்குத் தான் வரி கிடையாதென்ற நிபந்தனை ஏற்படுத்தச் சர்க்காருக்கு அதிகாரமிருந்தாலும், இப்பொழுது சர்க்கார் அவ்விதம் நிபந்தனை ஒன்றும் போடவில்லை. ஆகையால் கைத்தறி ஜவுளி மொத்த வியாபாரிகள் இனி லைசென்சு கூட வாங்கிக் கொள்ள வேண்டியதில்லை. சில்லறை வியாபாரிகளும் 1½ பைசா வரியும் விதிக்கப்படமாட்டார்கள். எவ்வித விற்பனைக்கும் இனி வரி கிடையாது. இவ்வியாபாரிகளுக்கு விற்பனை வரி கிடையாதே ஒழிய, அவர்கள் விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8A படி ஒவ்வொரு வருடமும் தங்களை 'வியாபாரி' என்று பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ளவேண்டும். இதற்கு விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. இவர்கள் 'ரிஜிஸ்டர்' செய்துகொண்ட போதிலும், இவர்கள் செய்யும் விற்பனைகளுக்கு வாடிக்கைக்காரர்களிடமிருந்து இவ்வியாபாரிகள் எவ்வித விற்பனை வரியும் வசூல்செய்யத் தடைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். (டர்ன்ஓவர் விதி 5A (7) பார்க்கவும்.) எந்தச் சட்டத்தில் சந்தேகம் வந்தபோதிலும் அச்சந்தேகத்தை அவரவர்கள் தாமாகவோ, வக்கீல் முதலியவர்களுடைய உதவியின் பேரிலோ தெளிவுசெய்து கொள்ளவேண்டுமே ஒழிய

இதற்காகத் தனி அதிகாரிகள் ஒருவருமில்லை. விற்பனை வரி அதிகாரிகள் அந்தந்த வழக்கில் வரி விதிப்புச் சம்பந்தமான தீர்ப்புச் செய்வார்கள். அப்பொழுது இவர்கள் சொல்லும் சட்ட சம்பந்தமான அபிப்பிராயம் சரி அல்ல என்றால், சம்பந்தப்பட்ட வியாபாரியானவர் அப்பீல் ரிவிஷன், 'ரிட்' முதலிய நடவடிக்கைகள் மூலம் அதிகார பூர்வமாகச் சந்தேகங்களை நிவர்த்திசெய்து கொள்ளலாம். ஹைகோர்ட்டாரின் அபிப்பிராயமும், சுப்ரீம் கோர்ட்டாரின் அபிப்பிராயமும்தான் யாவரையும் கட்டுப்படுத்தும் சக்தி வாய்ந்தவை.

அச்சாபீசுகளுக்கு விற்பனை வரி

60. கேள்வி: (நித்தியானந்தம் பிரஸ்—அரக்கோணம்.) (1) அச்சுக்கூடங்களில் அச்சடிக்கும் திருமணப்பத்திரிகை, நோட்டீஸ், பில்புக், மற்ற விளம்பர நோட்டீஸ்களும் இன்னும் பல விதமான விளம்பரங்களுக்கும் விற்பனை வரியுண்டா? இப்படிப்பட்டவை Finished Articles'ல் சேருமா? (2) ஒருவர் (Customer) பேபர் கொடுத்து அவருக்குத் தேவையானதை அச்சடித்துக் கொண்டுபோனால் அந்த அச்சுக் கூலிக்கு மாத்திரம் விற்பனை வரியுண்டா? அப்படி அச்சடித்த கூலி 'கான்ட்ராக்ட் ஒர்க்' என்னும் தலைப்பில் சேருமா?

பதில்: அச்சுக்கூடங்களுக்கு விற்பனை வரி விதிப்பது சம்பந்தமாகச் சென்ற மாதத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். வாடிக்கைக்காரர்களே காகிதம் கொடுத்து அச்சகங்கள் அச்சுவேலை மட்டில் செய்து கொடுத்தால் அதற்கு விற்பனை வரி கிடையாது. அதைப்போலவே அச்சகமே வாடிக்கைக்காரருக்குக் காகிதத்தைத் தனியாகத் தாமே விற்பனைசெய்து, அந்தக் காகிதத்தில் அவர்களே அச்சடித்துக் கொடுத்தாலும் காகித விற்பனைக்கு மட்டில் விற்பனை வரி உண்டு; அச்சுக்கூலிக்கு விற்பனை வரி கிடையாது. அதாவது வாடிக்கைக்காரர் வேறு எங்கேயோ காகிதம் வாங்கி அச்சகத்தில் அச்சடிக்கக் கொடுத்தால் எப்படியோ, அப்படியேதான் இதுவும். இவ்விதம் காகிதத்தை விற்பனைசெய்து, அதே காகிதத்தில் அச்சுவேலை செய்து கொடுக்கும் அச்சகங்கள் காகித விற்பனையைத் தனியாகவும் அச்சுக்கூலியைத் தனியாகவும் காண்பித்துக் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். அச்சகத்தால் காகிதமும் போட்டுக்கொண்டு அச்சுவேலையும் செய்து, மொத்தமாகப் பேபருக்கும் சேர்த்து 'பில்' செய்தால் அது 'ஒப்பந்தவேலை' அல்லது 'ஒர்க்ஸ் காண்ட்ராக்ட்' (Works Contract) என்று ஆகும். இதற்கு விதிகளின்படி தள்ளுபடி போகப் பாக்கித் தொகைக்கு விற்பனை வரி விதிக்கப்படும். சென்னை ஹைகோர்ட்டார் அளித்த தீர்ப்பின் வழக்கில் சேலத்திலுள்ள ஒரு அச்சாபீசுக்கு ஒரு வருடத்தில் பின் கண்டபடி மொத்த வியாபாரம் நடந்திருந்தது:—(1) கோர்ட் வேலைகளுக்குப் பேபர் உள்பட அச்சுக்கூலி ரூ. 3664-4-3 (2) அச்சுக்கூலி, நம்பர் போடுவது, பைண்டிங் சார்ஜ் இவைகளுக்கு மட்டில் வரவு ரூ. 10,194-3-5 (3) அச்சாபீசானது சப்ளை செய்த பேபர் கிரயம் ரூ. 5362-15-9 விற்பனை வரி அதிகாரிகளும் டிரிபுனலும் சில இனங்களைக் கழித்துக்கொண்டு இந்த அச்சகத்திற்கு அவ்வருடத்தில் ரூ. 14,000க்கு மேல் 'டர்ன் ஓவர்' என்று பாவித்து விற்பனைவரி விதித்தனர். ஹைகோர்ட்டில் மேற்கண்ட மூன்று 'ஐட'ங்களில் இரண்டாவதாகக் கண்டிருக்கும் அச்சுக்கூலி, நம்பர் போடுவது பைண்டிங் சார்ஜ், இவைகளுக்கான ரூ. 10,184-3-6 என்பதில் விற்பனை ஒன்றுமில்லை என்றும், இதுவேலை செய்ததற்கான கூலி மட்டில் என்றும் அபிப்பிராயப்பட்டு, இதை 'டர்ன் ஓவரி'ல் சேர்க்கக் கூடாதென்றும்; பாக்கி இரண்டு இனங்களையும் சேர்த்துக்கொண்டாலும் மொத்தம் ரூ. 10,000க்குள்தான் விற்பனை ஏற்பட்டிருப்பதால் அதற்கும் விற்பனை வரி கிடையாதென்றும் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்திருக்கின்றனர். இந்த அச்சகமானது பேபர் கிரயத்திற்குத் தனித்தனியாகக் கணக்குகள் வைத்துக்கொண்டிருந்தது என்பது கவனிக்கத்தக்கது.

வருமானவரி — அயல்நாட்டில் ஏற்பட்ட நஷ்டம் — இந்திய வியாபார லாபத்தில் கழித்துக் கொள்ளலாமா?

61. கேள்வி: (P. 3615 கதிர் செட்டியார்—மேட்டுப்பாளையம்.) இந்தியாவிலுள்ள ஒரு ரிஜிஸ்டரான கூட்டு வியாபாரக் கடைக்கு, சிலோனிலுள்ள ஒரு கூட்டு வியாபாரத்தில் ஒரு பங்கு உண்டு. மூன்று நாலு வருடங்களில் சிலோன் கூட்டு வியாபாரத்தில் கிடைத்த லாபத்தை இந்தியக் கடையின் லாபத்துடன் சேர்த்து இந்தியாவில் வருமான வரி விதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற வருடத்தில் சிலோன் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டிருந்தால், அந்த நஷ்டத்தில் இந்தியக்கடைக்குள்ள பங்கை, இந்தியக் கடையின் லாபத்திலிருந்து கழித்துக்கொள்ள இந்திய வருமானவரிச் சட்டத்தில் இடமுண்டா?

பதில்: அப்படிக் கழித்துக்கொள்ள முடியாது. சிலோன் வியாபாரமும் இந்திய வியா

பாரமும் ஒரே நபரோ, ஒரே கூட்டோ, நடத்தும் வியாபாரமுமல்ல.

கடன் ஒத்தி வைப்புச் சட்டம். விவசாயிமீதும் விவசாயி அல்லாதவர்மீதும் சேர்த்துப் போட வேண்டிய தாவா

62. **கேள்வி:** (ரங்கசாமி நாடார்—கோயமுத்தூர்.) விவசாயி அல்லாத ஒருவர் முனிசிபல் டவுனிலுள்ள தம்முடைய வீட்டை முதல் அடமானம் ரூ. 1000க்கும் இரண்டாவது அடமானம் ரூ. 5000க்கும் வைத்திருக்கிறார். இரண்டாவது அடமானப் பத்திரத்தில் முதல் அடமானத் தொகையைக் கொடுத்துத் தீர்க்கும்படி எழுதி இருக்கிறது. இரண்டாவது அடமானம் கொடுத்தவர் விவசாயி. முதல் அடமானதார் கோர்ட்டில் தாவா செய்ய விவசாயி அல்லாத வீட்டின் சொந்தக்காரரையும் விவசாயியாக இருக்கும் இரண்டாவது அடமானதாரையும் சேர்த்து, தாவா செய்ய இப்போதுள்ள இருக்கும் தாற்காலிகக் கடன் ஒத்தி வைப்புச் சட்டத்தால் தடை உண்டா? அல்லது தாவா போடலாமா?

பதில்: தடை உண்டு. விவசாயி, விவசாயி அல்லாதவர் இருவரும் கொடுக்கவேண்டிய கடனைப் பொருத்தும் மேற்படி சட்டத்தில் கண்ட ஒருவருட கெடுவுக்குள் தாவா போடமுடியாது.

(சென்னைக் கடன்பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டம். செக்ஷன் (3) விவரணம் II.)

மில் ஜவுளி வியாபாரமும் கைத்தறி ஜவுளி வியாபாரமும்

63. **கேள்வி:** (P. V. ரெங்கநாதன் — பீடம்பள்ளி.) ஒருவர் மில் ஜவுளி வியாபாரமும் 'சுதேசி' ஜவுளி வியாபாரமும் செய்யவேண்டியிருந்தால், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே லைசென்சுக்கு ரூ. 25-0-0 கட்டி லைசென்சு வாங்கவேண்டுமா? அல்லது மில் ஜவுளிக்கு லைசென்சு பெற்று, அத்துடனேயே 'சுதேசி' ஜவுளி வியாபாரமும் செய்யலாமா? 'சுதேசி' ஜவுளியில் மட்டில் வியாபாரம் செய்யவேண்டியிருந்தால் அதற்கு யாரிடம் லைசென்சு பெறவேண்டும்? அதற்கும் டிபாசிட் தொகை கட்டவேண்டுமா?

பதில்: சென்னை ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவு (Cloth Dealers Control Order) என்பது கைத்தறி ஜவுளி வியாபாரத்துக்கு பொருந்தாது. ஏனென்றால் அவ்வுத்தரவில் 'ஜவுளி' (Cloth) என்பதற்கு அர்த்தம் சொல்லுவதில், கைத்தறி ஜவுளியும் வேறு சில இனங்களும் சேர்ந்தவை அல்ல என்று சொல்லப்பட்டிருக்கிறது. (கேள்வியில் "கைத்தறி ஜவுளி" என்பதற்கு 'சுதேசி' ஜவுளி என்று தவறுதலாக சொல்லப்பட்டிருக்கிறது. மில் ஜவுளியும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் 'சுதேசி' ஜவுளிதான்.) கைத்தறி ஜவுளியில் மட்டில் வியாபாரம் செய்ய எவ்விதக் கட்டுப்பாடு உத்தரவும் இல்லை. இதற்கு லைசென்சும் வாங்கவேண்டியதில்லை.

64. **கேள்வி:** (சவுந்தப்ப செட்டியார்—பொள்ளாச்சி.) A3 ரிட்டன் மாதா மாதம் 25-ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும் ஓர் கடையின் முதலாளி தம் அலுவலாக ஊரில் இல்லாதபொழுது அக்கடையின் குமாஸ்தாக்கள் A3 ரிட்டன் பாரத்தில் கையெழுத்துப் போட்டு அனுப்பலாமா?

பதில்: இவ்விஷயம் சம்பந்தமாக விற்பனை வரி விதி 22A என்று ஒரு புதிய விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. (1954 "வக்கீல்" மார்ச் மாத இதழ் பக்கம் 8 பார்க்கவும்.) தனி நபர் நடத்தும் வியாபாரத்தில் விற்பனை வரி ரிடர்ன்களில் முதலாளிதான் கையெழுத்துப் போடவேண்டும். அல்லது அவரிடம் சட்டப்படி பவர் ஆப் அட்டார்னி பெற்ற ஒருவர் கையெழுத்துப் போடலாம். கூட்டு வியாபாரமாக இருந்தாலும், இந்து பிரிபடாத குடும்ப வியாபாரமாக இருந்தாலும் அக்கடைக்கு 'மானேஜர்' அல்லது 'நிர்வாகி' என்று ஒருவருடைய பெயரைக் குறிப்பிட்டு நமூனா 19ன்படி விற்பனை வரி அதிகாரிக்குத் தெரிவித்துவிடவேண்டும். முதலாளிகளைத் தவிர அப்படிக் குறிப்பிடப்பட்ட மானேஜர்தான் ரிடர்ன்களில் கையெழுத்துப் போடவேண்டும். இவ்விதம் நியமிக்கப்படாத குமாஸ்தாவானவர் ரிடர்ன்களில் கையெழுத்துப் போட்டால் போதாது; அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

65. **கேள்வி:** (லாலா கிருஷ்ணம நாயக்கர்—கள்ளப்பாளையம்.) 1951ஆம் ஜனவரி 1உ பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்து கடன் வாங்கிய ஒருவர் சென்னை கடன்பட்ட விவசாயிகள் தற்காலிகப் பரிகாரச் சட்டத்திற்குப் பிறகு பிராமிசரி நோட்டில் "செல்லு எழுதிக் கொடுக்கவும் மாட்டேன் பணமும் கொடுக்க மாட்டேன்" என்று சொல்லுகிறார். இதற்கு எந்தத் தேதியில் கோர்ட்டில் தாவா செய்யவேண்டும்?

பதில்: கடன் வாங்கியவர் அச்சட்டத்தில் கண்டபடி ஒரு விவசாயி அல்லாதவராக இருந்தால், பிராமிசரி நோட்டுத் தேதியிலிருந்து மூன்று வருடங்களுக்குள் தாவா செய்யவேண்

டும். கடன் வாங்கியவர் "விவசாயி"யாக இருந்தால் 5-12-1953 முதல் 5-2-1955 வரை உள்ள நாட்களைக் கழித்து மேற்கண்ட மூன்று வருடங்களைக் கணக்குச் செய்ய வேண்டும்.

66. கேள்வி: (மொய்தீன்—ஆம்பூர்.) ஒருவர் ஒரு சுத்த விக்கிரயப் பத்திரம் எழுதிக் கொடுத்து விக்கிரயப் பத்திரத்தில் கண்ட சொத்தை விக்கிரயம் வாங்கிக்கொள்ள விக்கிரய தாரிடமிருந்து ஒரு உடன்படிக்கை எழுதி வாங்கிக் கொண்டு இருக்கிறார். இப்போது உடன்படிக்கையின் பாத்தியத்தை மூன்றாவது நபருக்கு விக்கிரயம் செய்துவிட்டார். இவர் முதல் கிரயதாரிடம் விக்கிரயம் வாங்க முடியுமா?

பதில்: முடியும். ஆனால் ஸ்டாம்பு ரிஜிஸ்டர் சட்டங்களின்படி உடன்படிக்கை பாத்தியமானது மாற்றப்பட்டிருக்கவேண்டும்.

ரூ. 100க்கு மேற்பட்ட பிராமிசரி நோட்டின் பாக்கி கிராம கோர்ட்டில் தாவா செய்யலாமா?

67. கேள்வி: (ராஜகோபாலன் — மதுரை.) ரூ. 100-0-0க்கு மேற்பட்ட பிராமிசரி நோட்டில் செல் நீக்கி ரூ. 50 மட்டும் பாக்கி இருந்தால் அதைக் கிராம முனிசிப்பு கோர்ட்டில் பிராது போடலாமா? டி பிராதைக் கிராம முனிசிப்பு ஏற்றுக் கொள்ளலாமா?

பதில்: கிராம முனிசிப் கோர்ட்டில் பிராது போடலாம்.

தகப்பன் சுவீகாரம் செய்து கொள்ளுவதைப் பெண்மக்கள் தடுக்கலாமா?

68. கேள்வி: (K. P. கிருஷ்ணன்—திண்டுக்கல்.) தற்காலத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை உண்டா? சொத்து உடைய ஒரு இந்து ஆண், தம்முடைய சொத்தைப் பெண்ணுக்குக் கொடுக்காமல் வேறு யாரையாவது சுவீகாரம் எடுத்துக்கொண்டு, பெண் சொத்தை சுவீகாரப் பிள்ளைக்கு உரிமை ஆக்கலாமா? அப்படி அவர் சுவீகாரம் எடுத்தால் தடுக்கலாமா?

பதில்: ஆண் மகனில்லாத இந்து ஒருவர் சுவீகாரம்செய்து கொள்ளலாம். அதை ஒருவரும் தடுக்க முடியாது. அவருடைய சொந்தப் பெண்மக்கள் கூடத் தடுக்க முடியாது. சுவீகார மகன், சொந்த மகனைப் போலவே தகப்பனுடைய சொத்துக்களில் உரிமை உள்ளவராவார். சொந்த மகனில்லாதவர் சுவீகாரம் செய்து கொள்ளாமல் இறந்து போனால்தான், அவருடைய மனைவி இருந்தால் மனைவிக்குப் பிறகு, பெண்ணுக்கு வார்சு பாத்தியம் ஏற்படும். அதுவரை தகப்பனுடைய சொத்தில் பெண்ணுக்கு வார்சு உரிமை கிடையாது.

இந்துச் சட்டம் தகப்பனும் மகனும் பாகம் செய்து கொண்ட பிறகு தகப்பனுக்கு மூன்று ஆண் மக்கள் பிறந்தனர். இவர்களுக்குப் பாகம் உண்டா?

69. கேள்வி: (P. K. சுப்புபிள்ளை—சோழவந்தான்.) பூர்வீகச் சொத்துள்ள ஒரு இந்துவுக்கு ஒரு ஆண் மகன் உண்டு. தகப்பனும் மகனும் எல்லாச் சொத்துக்களையும் பாகம் செய்துகொண்டனர். பிறகு தகப்பனுக்கு மூன்று ஆண் மக்கள் பிறந்தனர். தகப்பன் தம் பாகத்துக்குக் கிடைத்த சொத்துக்களை விரயம்செய்துவிட்டார். பாகப் பிரிவினைக்குப் பிறகு பிறந்த ஆண்மக்களுக்கு, அண்ணன் அடைந்த பாக சொத்தில் பாகமுண்டா? முதல் பாகபத்திரத்தை ரத்துச் செய்து புதியபாகபத்திரம் ஏற்படுத்தத் தகப்பனுக்கு உரிமை உண்டா? இல்லையானால், பாகப்பிரிவினைக்குப்பின் பிறந்த ஆண் மக்களுக்கு மட்டில் பூர்வீகச் சொத்தில் பாத்தியமே இல்லாமல் போய்விடுமா?

பதில்: பாகப்பிரிவினை ஏற்பட்டபிறகு பிறக்கும் ஆண்மக்களுக்கு, அப்பாகபிரிவினையை ரத்துச்செய்து மறுபடியும் பாகம்செய்யவேண்டுமென்று கேட்க உரிமைஇல்லை. ஆனால் அவர்களுக்கு வேறு ஒரு உரிமை உண்டு. அதாவது தகப்பனுடைய வீதத்திற்குக் கிடைத்தபாகச் சொத்துக்களையும், சரி, தகப்பனுடைய சுயசம்பாத்தியமுள்ள தனிசொத்துக்களையும் சரி, தகப்பனுக்குப்பிறகு இவர்கள் மட்டில் வார்சுமுறைமையில் அடைவார்கள். பாகம்பிரித்துக்கொண்டு போன அவர்களுடைய மூத்த சகோதரருக்கு அச்சொத்துக்களில் எவ்வித உரிமையும் ஏற்படாது. தகப்பன் தம்முடைய பாகச்சொத்துகளையும் விரயம் செய்து விட்டால், பாகபிரிவினைக்குப்பின் பிறந்த ஆண்மக்கள் ஏமாந்துபோனவர்கள் தான். அதாவது அவர்கள் பாகம் பிரிந்துபோன அண்ணனிடமிருக்கும் சொத்தை மறுபடியும் எல்லோரும் பாகம் செய்து கொள்ள வேண்டுமென்று கேட்க முடியாது. முதலில் ஏற்பட்ட பாகபத்திரத்தை ரத்துச்செய்யவோ, மறுபடியும் அச்சொத்தைக் குறித்து ஒரு பாகப் பிரிவினை செய்து வைக்கவோ, தகப்பனுக்கு உரிமை இல்லை.

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

K. ஸ்ரீநிவாஸன் M. A.
(தஞ்சை ஹௌட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

முகவுரை

கூட்டுறவு என்பது Co-operation (கோ-ஆபரேஷன்) என்னும் ஆங்கிலத்தின் தமிழ்ச் சொல். ஆங்கிலத்தில் கோ-ஆபரேஷன் என்றால் கூடிச்செய்தல் என்பது பொருள். அதை அவர்கள், சுரண்டப்படும் மக்கள் சுரண்டலைத் தடுத்து தங்கள் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்ளவேண்டி கூடிச்செய்கின்ற பொருளாதார இயக்கத்தைக் குறிக்க உபயோகித்தனர்.

கோ - ஆபரேஷன் என்ற ஆங்கில-மொழியைத் தமிழில் அப்படியே மொழிபெயர்க்காமல், தமிழர்கள் "கூட்டுறவு" என்னும் அழகிய சொல்லால் கூட்டுறவின் உண்மைத் தத்துவங்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

கோ - ஆபரேஷனின் அடிப்படை ஒற்றுமையான முயற்சி; அதன் லக்ஷியம் பரஸ்பர சகாயம். கூட்டாளித்தன்மை, உறவு முறை ஆகிய இரண்டு கருத்துக்களும் "கூட்டுறவு" என்னும் சொல்லில் அமைந்திருப்பது ஒரு சிறப்பாகும்.

விவசாயிகள் பெருத்த இந்தியாவில் பருவ மழை அடிக்கடி தவறி, பஞ்சம் ஏற்படுவது சகஜமாயிருந்தது. பழைய காலங்களில் இவைகளை எதிர்பார்த்து, கிராம சமுதாயங்கள் போதுமான தானியங்களைக் காப்பாற்றி வந்தன.

பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் அந்த முறை சீர்குலைந்து தனிமுயற்சி மேலிட்டது. பஞ்ச காலத்தில் ஏழை மக்கள் உணவுக்கும், பஞ்சம் தெளியும் காலத்தில் விதை, கால்நடை வாங்கவும் கடன்கள் வாங்க நேர்ந்தது. விவசாயிகள் இந்தக் கடன்களை வருடம் 18 முதல் 36 சதவிகிதம் வரை வட்டிகளில் வாங்க நேர்ந்ததால் கடன்கள் கட்டமுடியாமல் பெருகி, சில ஆண்டுகளுக்குள் அவர்கள் மகசூலில் பெரும்பாகத்தை வட்டிக்குக் கொடுத்து வறுமையில் வாழவும், பின்பு நிலத்தைக்கடனுக்கு விற்றுவிட்டுக் கூலிவேலை செய்து பிழைக்கவும் நேரிட்டது. இதைச் சகிக்காமல் விவசாயிகள் சில சமயங்களில் கலகம் செய்தனர். கிஸ்துகள் வசூலிப்பதும் கஷ்டமாயிருந்தது. அவர்கள் நிலையைப் பரிகரிக்கச்சர்க்கார் இயற்றிய தக்காண விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம், தக்காவிக் கடன் சட்டங்கள் எதிர்பார்த்தபடி பலன் அளிக்கவில்லை. ஆகவே ஐரோப்பாவில் ஏழைகளுக்கு அதிக உதவியாய்க் காணப்பட்ட கூட்டுறவு இயக்கம் இந்தியாவில் சர்க்காரால் புகுத்தப்பட்டது.

1900 ம் ஆண்டிற்கு முன்பே பஞ்ச நிவாரணக் கமிஷன் விவசாயிகளின் கஷ்ட நிலையைப் பரிகரிக்க ஏதாவது பெருஞ்செயல் ஆற்றப்படுவது அவசியம் என்று வற்புறுத்தியிருந்தது. அநேக ஜில்லா கலெக்டர்களும் அதே கருத்தைத் தெரிவித்திருந்தனர். பேர்னி போன்ற ஒரு சிலர் அதற்காகச் சில ஜன-நிதி (People's Bank)களை ஏற்படுத்தினர். கலெக்டர் நிகல்சனைச் சென்னை சர்க்கார் ஐரோப்பா சென்று விசாரித்து தகுந்த பரிகாரத்தைச் சிபார்சு செய்யும்படி கோரியது. அவர் தீர விசாரித்து விவசாயிகளுக்கு நியாய வட்டியில் பயிர்ச்செலவிற்கான கடன் தொகைகள் கொடுக்கப்படுவது அவசியம் என்றும், அதற்கான நிதிகளை ஜெர்மன் ரெபீசன் முறையில் ஏற்படுத்துவது நலம் என்றும் சிபாரிசு செய்தார்.

1902ஆம் ஆண்டில் இந்தியா சர்க்கார் ஏதாவது உடனே செய்வது அவசியம் என்று கருதி தகுந்த சிபார்சுகளைச் செய்ய, சர் எட்வர்ட்லா தலைமையில் ஒரு கமிட்டியை நியமித்தனர். அக்கமிட்டி இந்தியாவில் ரெபீசன்முறையில் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவது அவசியம் என்றும், அதற்காகக் கம்பெனிச் சட்டத்தைத் திருத்துவதைவிட ஒரு தனிச்சட்டத்தை ஏற்படுத்திவிடலாம் என்றும் சிபாரிசு செய்தனர். அதை அனுசரித்து 1904ல் செய்யப்பட்ட ஒரு சட்டம் மூலம் இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தப்பட்டது.

கூட்டுறவு இயக்கத்திற்குத் தனிச்சட்டம் இயற்றப்பட்டது

கம்பெனிச் சட்டம், லாபம் கோரி வேலைசெய்யும் வியாபாரிகளின் கூட்டுகளை (கம்பெனிகளை) கட்டுப்படுத்த ஏற்பட்டது. அதன் ஷரத்துகள் பல சிக்கல்கள் நிறைந்தவை, கம்பெனிச் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்வதற்கு நூற்றுக்கணக்கான தொகை தேவையாயிருந்தது.

ஏழைகள் தங்களுக்குள் ஒத்தாசை செய்து கொள்ள ஏற்படுத்திக் கொள்ளும் ஸ்தாபனங்கள் செலவின்றி, அல்லது சொற்பச் செலவில் சுலபமாகப் பதியப்படுவது அவசியமாயிருந்தது. படிப்பு அதிகமில்லாத கிராமவாசிகள் கம்பெனிச் சட்டத்தை அறிந்து நடக்கமுடியாது. ஆகவே, அவர்களுக்கான சுலபமான விதிகளைக்கொண்ட பதிவுச்

சட்டம் ஒன்று தேவையாயிருந்தது. தவிர, சர்க்கார் கூட்டுறவுச் சங்கங்களைத் தாங்களே கண்காணித்து நடத்த விரும்பினர். அதற்குக் கம்பெனிச் சட்டத்தில் வழியில்லை. இக்காரணங்களால் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்யவும் சர்க்காரே நிர்வகிக்கவும் அதிகாரம் தரும் ஒரு தனிச்சட்டம் செய்வது அவசியமாயிற்று.

கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்ய வேண்டும்

கம்பெனிச் சட்டப்படி எழுவர்க்குமேல் கூடி, செய்யவும் எந்த வியாபாரமும் ரிஜிஸ்தர் செய்யப்படவேண்டும். ரிஜிஸ்தர் செய்யாமல் நடத்துவது குற்றம். கூட்டுறவுச் சங்கங்களுக்கு கம்பெனிச் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்துகொள்ளக் கூடிய பொருளாதாரம் கிடையாது. ஆகவே அவைகளைக் கம்பெனிச் சட்டத்திலிருந்து விலக்கி, தனிபதிவுக்கு ஏற்பாடு செய்வது அவசியமாயிற்று.

கூட்டுறவுச் சங்கங்களை ஏதாவது சட்டப்படி பதிவு செய்யாவிட்டால் அவைகள் சட்டபூர்வமாக ஒரு நபர்போல் கடன்வாங்கவும், கடன் கொடுக்கவும், சொத்துக்கள் வாங்கவும், வியாபாரம் செய்யவும், கோர்ட்டில் விவகாரங்களை நடத்தவும் முடியாது. தவிர, பதிவில்லாத சங்கங்களுக்கு, சர்க்கார் உதவிகள் செய்யவோ, மற்றவர்கள் நம்பிக்கடன் கொடுக்கவோ மாட்டார்கள். ஆகையால் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டாயமாகப் பதிவுசெய்வது அவசியமாயிருந்தது.

கூட்டுறவு இயக்கத்தைச் சீர்படுத்த இயற்றப்பட்ட சட்டங்கள்.

முதலாவது சட்டம் (Act X of 1904) 1904ல் செய்யப்பட்டது. இந்தச்சட்டம் கூட்டுறவு நாணயச்சங்கங்களை மட்டும் ஏற்படுத்த வகை செய்தது. 1904 சட்டப்படி சர்க்கார் கூட்டுறவுச் சங்கங்களை இலவசமாகப் பதிவு செய்து, அவைகளின் கணக்குகளை வருடந்தோறும் தணிக்கைசெய்து நன்மதிகள் கூறிவர, பல ரிஜிஸ்தாரர்களை நியமித்தது.

1912ல் ஏற்பட்ட (Act ii) கூட்டுறவுச் சட்டம் முதல் முதலாகக் கைத்தொழில், வியாபாரச் சங்கங்களையும், கூட்டுறவு மத்திய-பாங்கிகள், மேற்பார்வை, கூட்டுறவுப் பிரசாரம் இவைகளுக்கான ஸ்தாபனங்கள் முதலியவைகளை ரிஜிஸ்தர் செய்யவும் வகைசெய்து, இயக்கத்தின் அடிப்படையை விஸ்தரித்தது. ரிஜிஸ்திராரின் அதிகாரங்களும் தேவைக்கேற்பப் பெருக்கப்பட்டன.

1928ம் ஆண்டில் நாட்டில் ஒரு பெரிய பொருளாதார மந்தம் நிகழ்ந்தது. அதன் பயனாக விவசாயப் பொருள்கள், நிலங்களின் விலைகள் குறைந்தன. விவசாயிகள் தவணைப்படி கடன்களைக் கட்டமுடியாததால் வாய்தா கடந்த பாக்கிகள் பெருகிவிட்டன. இயக்கத்தைக் காப்பாற்ற கண்டிப்பான நிறைவேற்று நடவடிக்கைகள் அவசியமாயின. தவிர, 1920 முதல் கூட்டுறவு மாகாண விஷயமாய் விட்டதால் மந்திரிகள் சென்னை மாகாணத்திற்காக ஒரு தனிச்சட்டம் இயற்ற விரும்பினர். 1928ல் நியமிக்கப்பட்ட டவுன்-செண்ட் கமிட்டி, பம்பாய் மாகாண மாதிரியில் ஒரு தனி கூட்டுறவுச் சட்டம் ஏற்படுத்தும்படி சென்னைச் சர்காருக்கு சிபார்சு செய்தது. இவைகளையெல்லாம் கருதி 1932வது ஆண்டு VIவது (கூட்டுறவுச்சங்க) சட்டம் இயற்றப்பட்டது.

இதுவே தற்சமயம் அமலில் உள்ள சட்டம். இதற்கு ஆதாரவாக 1934ல் நில-அடமான பாங்கிகள் பற்றிய ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இந்த இரண்டு சட்டங்களும் அவைகளின்கீழ் செய்யப்பட்ட (Rules) விதிகளுமே தற்சமயம் அமலில் உள்ள கூட்டுறவு பற்றிய சட்டங்களாகும்.

கூட்டுறவுச் சட்டத்தை அமல்செய்யும் அதிகாரிகள்.

கூட்டுறவுச் சட்டத்தை அமுல்செய்வது ராஜ்ய சர்க்காரால் கூட்டுறவுச்சட்டம் 3வது செக்ஷன் படி நியமிக்கப்படும் ரிஜிஸ்திராரின் பொறுப்பாகும். அவருக்குச் சட்டத்தில் ரிஜிஸ்திராருக்குள்ளதாகக் கூறப்பட்டிருக்கும் அதிகாரங்களைச் சர்க்கார் உத்தரவுமூலம் அளிப்பார்கள். சர்க்கார் உசிதம்போல் ஒன்றிற்கதிகமான ரிஜிஸ்திரார்களை நியமிக்கலாம்.

ரிஜிஸ்திராரின் முதல்பொறுப்பு சங்கம் ஏற்பட்டால் நன்கு வேலைசெய்யுமா என்று அறிந்துகொண்டு அதன் பொறுப்பையும் பைலாக்களையும் நிர்ணயித்து, செக்ஷன் 7 படி ரிஜிஸ்தர் செய்வது. மற்றும் அவர் சங்கங்களை கூட்டுறவுத் தத்துவப்படி நடக்க உதவிசெய்து அவைகளின் கணக்குகளைப் பிரதி வருடமும் தணிக்கை (Audit) செய்து சங்கத்தின் வேலை விபரங்களைப்பற்றி, சர்காருக்கு ரிபோர்ட் அனுப்பவேண்டும். அவ்வப்பொழுது பைலாக்களை ரிஜிஸ்தர் செய்யவேண்டும். (S. 12)

ரிஜிஸ்திரார் இந்தப் பொறுப்புகளைச் சரிவர நிறைவேற்றவேண்டி அவருக்கு அவசியமான சிப்பந்திகளைச் சர்க்கார் கொடுத்து உதவியுள்ளனர் (டிப்டி ரிஜிஸ்திரார், சப்-ரிஜிஸ்திரார், இன்ஸ்பெக்டர்கள் முதலியோர். தவிர, அவருக்குச் சங்க பைலாக்களைத் தீர்மானம் செய்யவும், அவைகளின் கருத்துபற்றித் தீர்ப்புக் கூறவும் (செக்ஷன். 8) சங்கம் கடன் வாங்கும் அளவைத் தீர்மானிக்கவும் (செக்ஷன். 32&33) சங்கம் வைக்கவேண்டிய கணக்குகளைத் தீர்மானித்து

அவைகளை ஆடிட்செய்யவும் (செக்ஷன். 37) சங்கவேலை முறையை கண்டிப்பாக விசாரிக்கவும் (செக்ஷன். 38) கணக்கு எழுதத் தவறும் சங்கங்களின் கணக்குகளைக் கட்டாயமாக எழுதி முடிக்கவும் (விதி V. A.) சரியாக வேலை செய்யாத சங்கக் கமிட்டியைக் கலைத்து ஒரு நிர்வாகஸ்யரை நியமிக்கவும் (செக்ஷன். 43) அவசியம் ஏற்பட்டால் சங்கத்தைக் கலைத்து விடவும் (செக்ஷன். 44) அதிகாரம் உண்டு.

தவிர, சங்கங்கள் தங்கள் பாக்கிகளைச் சுலபமாக வசூல் செய்து கொள்ள உதவவேண்டி அவருக்கு 51வது செக்ஷன்படி வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புசெய்யவும், 57 A செக்ஷன்படி டிக்ரிகளை நிறைவேற்றவும் அதிகாரம் உண்டு. இன்னும் அவர் சங்கத்திற்கு எந்த வகையிலாவது கஷ்டம் ஏற்படுத்தியவர்கள்மீது 49வது செக்ஷன்படி தண்டம் சுமத்தி (Surcharge) வசூலிக்கலாம். கூட்டுறவுச் சட்டத்தை மீறுபவர்கள்மீது அவர் 52, 56 வது செக்ஷன்படி வழக்குகள் தொடர்ந்து தண்டனை விதிக்கச் செய்யலாம்.

எந்தக் காரியத்திற்கு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம்

கூட்டுறவு லக்ஷியங்களைக் கொண்ட காரியங்களுக்கு மட்டுமே சங்கம் அமைக்கக் கூட்டுறவுச் சட்டம் (செக்ஷன் 4) இடம் கொடுக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தினர்களுள் சிக்கனம், சுயஉதவி, பரஸ்பர சகாயம் ஆகியவைகளை வளர்க்கவேண்டும். அவைகளின் நிர்வாகம் கூட்டுறவுத் தத்துவங்களுக்கு உகந்தபடி ஜனநாயக முறையில் சுரண்டல் தன்மையற்றதாய் இருக்க வேண்டும். அதாவது ஒரு மெம்பருக்குச் சங்க மகாசபையில் ஒரு ஓட்டுத்தான் இருக்கும். தவிர அவருடைய பங்குத்தொகைமீது லாபம் ஒரு அளவுக்குமேல் கொடுக்கப்படமாட்டாது.

மெம்பர்களின் நாணயத்தேவையைப் பூர்த்தி செய்யவும் (Credit), அவர்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கி வைத்து விற்கவும் (Stores), வீடுகள் கட்டிக்கொள்ளவும், மெம்பர்கள் சாமான்களை உற்பத்தி செய்து விற்கவும் (Production & Sale) சங்கங்கள் ஏற்படுத்தப்படலாம். இன்னும், மேற்சொன்ன காரியங்களுக்கு உதவுவதற்கு யூனியன், மத்திய பாங்கி போன்ற உதவும் (Aiding) சங்கங்களையும் ஏற்படுத்தலாம்.

எப்படியும் சங்க வேலைகளின் பயனாக அங்கத்தினர்களிடையே நல்ல உற்பத்தி, நல்ல வியாபாரம், நல்ல வாழ்க்கை இம்மூன்றும் விருத்தியடையவேண்டும். இந்த லக்ஷியங்களைப் பூர்த்தி செய்யும் எந்த முயற்சியையும் கூட்டுறவுச் சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யும்படி ரிஜிஸ்திராரைக் கோர மக்களுக்கு உரிமை உண்டு.

187731

ரிஜிஸ்தர் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பு

பதிவைக்கோரும் கூட்டுறவுச் சங்கத்தின் பொறுப்பு, செக்ஷன் 4 படி தீர்மானிக்கப்பட்டு மனுதார்களால் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும்.

a. கிராமங்களில் அங்கத்தினர்களுக்கு ஜாமீன் பேரில் கடன் கொடுக்க ஏற்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பொறுப்பு வரையறுக்கப்படாததாய் இருக்க வேண்டும்.

b. ரிஜிஸ்தர் செய்யப்பட்ட சங்கத்தை அங்கத்தினராகக் கொண்ட சங்கத்தின் பொறுப்பு கட்டாயம் வரையறுக்கப்பட்டதாய் இருக்கவேண்டும்.

மற்ற சங்கங்கள் உசிதப்போல் பொறுப்பை ஏற்படுத்திக்கொள்ளலாம். மற்ற சங்கங்களுக்கு உசிதமான பொறுப்பு, ரிஜிஸ்திரார் சிபாரிசு செய்யும் மாடல் பைலாவில் குறிக்கப்பட்டிருக்கும்.

கூட்டுறவுச் சங்கத்தில் எந்த மெம்பரும் ரூ. 1000 அல்லது சங்க முதலீட்டில் 5-ல் 1-பங்குக்குமேல் பங்குத் தொகை போடக்கூடாது.

இந்த நிபந்தனை உண்மைதான். இது கூட்டுறவுச் சட்டம் 6ஆவது செக்ஷன்படி வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள சங்கங்களில் சேரும் தனி நபர்களையே கட்டுப்படுத்தும். ஒரு நபர் அதிகமான பங்குகளை எடுத்துக்கொள்ள அனுமதித்தால் அவர் அதன் மூலம் சங்க விவகாரங்களில் தம்முடைய செல்வாக்கை அதிகப்படுத்திக் கொண்டு அதைத் துஷ்பிரயோகம் செய்யலாம். கூட்டுறவுச் சங்கங்கள் எப்பொழுதும் எல்லோரும் சுலபமாகச் சேர்ந்து சங்க காரியங்களை நடத்த உதவியான வழியில் மெம்பர்களைச் சேர்க்க வகைசெய்வது முக்கியம்.

உங்கள் கிராமத்தில் ஒரு நாணயச் சங்கம் ஏற்படுவது எப்படி?

இந்தக் காலத்தில் கிராமத்தில் கூட்டுறவு நாணயச்சங்கம் ஏற்படுத்துவது சுலபம். சர்க்காரே இது விஷயத்தில் தீவிரமாக உள்ளனர். கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்துவது கிராமச் சீரமைப்பு வேலையில் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது.

ஊரில் உள்ள 15க்குக் குறையாத முக்கியஸ்தர்கள் சேர்ந்து ஜில்லா கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் அவர்களுக்குத் தங்களுக்காக ஒரு

கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று மனுச்செய்து கொள்ள வேண்டும். மனுவில் கிராமத்தில் உள்ள குடும்பங்கள், சங்கத்தில் சேரக்கூடியவர்களின் சங்கியை, சங்கம் ஏற்பட்டால் எவ்வளவு வேலை தேவை நடைபெறும், என்பவை குறிக்கப்படுவதுடன் இந்த மனு சம்பந்தமான பதில் யாருக்கு எழுதப்படவேண்டுமென்பது குறிக்கப்படவேண்டும். சங்கத்தின் வேலை-எல்லை அங்கத்தினர் பரஸ்பரம் அறியக்கூடிய அடக்கமானதாக (Compact) இருக்க வேண்டும்,

மனுவை ரிஜிஸ்திரார் ஒரு இன்ஸ்பெக்டரிடம் விசாரணைக்கு அனுப்புவார், இன்ஸ்பெக்டர் தெரிவிக்கும் தேதியில், மனுதார்கள் கூடி அவரிடம் சங்கம் அவசியமென்றும், அது ஏற்பட்டால் ஒழுங்காக நடத்தப்படும் என்றும் நம்பிக்கைப் படுத்தவேண்டும். பின்பு அந்த இன்ஸ்பெக்டர் மனுதார்களுக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாதிரிப் பைலாக்களை வாசித்துக் காட்டி, அதிலும் சட்டப்படி ஏற்பட்டுள்ள அச்சு நமூனாவிலும் மனுதார்களின் கையெழுத்தை வாங்கிக்கொள்வார். மனுவில் ஏற்படக்கோரும் சங்கத்தின் பெயர் விலாசம் பொறுப்பு மற்றும் மனுதார்கள் பெயர். வயது, தொழில், நில ஆஸ்தி குடியிருப்பு முதலியவை குறிக்கப்பட்டிருக்கும், தவிர சங்கம் ஏற்பட்டால் அதை நிர்வகிக்க வேண்டிய முதல்- பஞ்சாயத்தார்கள் பெயரும் மனுதார்களால் தீர்மானிக்கப்பட்டு மனுவில் குறிக்கப்படவேண்டும்.

இன்ஸ்பெக்டரிடமிருந்து மனு கிடைத்ததும் கூட்டுறவு டிப்டிரிஜிஸ்திரார் அதைப் பரிசீலனை செய்து, சங்கம் நன்கு நடக்குமென்று திருப்தியடைந்தால் உடனே சங்கத்தை ரிஸ்தர்செய்வார். ரிஜிஸ்தர் செய்ததற்கு அத்தாட்சியாக ரிஜிஸ்திரேஷன் சர்டிபிகேட்டையும் சங்க பைலாக்களையும் ரிஜிஸ்திரார் மனுதார்களுக்கு ரிஜிஸ்டர் தபால்மூலம் அனுப்பிவைப்பார். தவிர, சங்கம் வேலை துவக்க ஒத்தாசை செய்யும்படி பிரதேச சூபர்வைசிங் யூனியனையும் கேட்டுக் கொள்வார்.

கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த குறைந்தது எவ்வளவு அங்கத்தினர்கள் வேண்டும்?

தனி நபர்களால் கோரப்படும் எந்த சங்கத்திற்கும் குறைந்தது பத்து நபர்கள் இருந்தாக வேண்டும். 1952ஆவது வருஷ கூட்டுறவுச் சட்டம் 9-ஆவது செக்ஷன்படி சங்கங்களாகச் சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் யூனியன் போன்ற கூட்டு-சங்கங்களுக்கு இந்தநியதி கிடையாது. சில சங்கங்களும் சில நபர்களும் சேர்ந்து சங்கம் கோரும் சந்தர்ப்பத்தில் எல்லாச் சங்க-மெம்பர் பிரதிநிதிகளும், தனி நபர்கள் பத்துக்கதிகமானவர்கள் இருந்தால் குறைந்தது பத்து நபர்களும், பத்துக்குக் குறைவானவர்களிருந்தால் எல்லோரும் மனுவில் கையெழுத்திட வேண்டும். சங்கம் வேலை துவக்கும் தேதியில் பத்து நபர்களாவது வேண்டுமாகையால் முதல்-மனுவில் பத்துக்கதிகமானவர்களிடம் கையெழுத்து வாங்குவது அவசியம்.

(தொடரும்.)

கூட்டுறவுச் சட்டமும் விதிகளும். வினா-விடை

ஆசிரியர்

K. ஸ்ரீநிவாஸன் M. A.

(தஞ்சை ஹூவிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

1932ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும், 1934ஆம் வருடத்திய நில அடமான பாங்கிகள் பற்றிய சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் வினா-விடை முறையில் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும், மெம்பர்களும் கட்டாயமாக வைத்துக் கொள்ளவேண்டிய புத்தகங்களில் இதுவும் ஒன்று.

விலை ரூ. 1—8—0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம்:— K. சீனுவாசன் M. A.

ஹூவிட் கூட்டுறவுப் பயிற்சிக் கழகம், தஞ்சாவூர்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.

மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற

—: அறந்தாங்கி :—

786 சங்கு சோப்பை

வாங்கி உபயோகியுங்கள்

கட்டி 1-க்கு அணு 0-1-3தான்

தயாரிப்பவர்:—

இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

மக்களுக்கு வேண்டியது மூன்று சுத்தம், அதாவது, மனம். வாக்கு, காயம். அதிலே பிரதானம் காயசுத்தி. காயசுத்தி இல்லாமல் எந்த மனிதனும் அதாவது பாட்டாளி முதல் - பணக்காரர் வரையிலும் (சிறிய உத்தியோகஸ்தர் முதல் பெரிய ஆபீஸர் வரையில்) அவரவர்கள் வேலையைச் சரிவரக் கவனிக்க இயலாது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகவே அதற்காகச் செய்யப்பட்ட அற்புத மருந்து.

ரிஜிஸ்டர் நெ. 138512

'ஜெயராம்' காயசுத்தி லேகியம்

குடல், இரைப்பை கோளாறுகளாகிய **தீராத வயிற்றுவலி**, ஓயாத வாந்தி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், நெஞ்சு, முதுகு, இடுப்புவலி, கிருமிகளின் உபாதை, மூலநோய், நாள்பட்ட மலச்சிக்கல் முதலியவைகளைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும். இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும். போலிகள் அதிகம் இருப்பதால் மேலே கண்ட ரிஜிஸ்டர் நெ. 138512-ஐ கவனித்து வாங்கவும்.

1 சேர் விலை ரூ. 4—8—0 ½ சேர் விலை ரூ. 2—4—0 வி. பி. பி. தனி.

தயாரிக்குமிடம்:—

G. ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிசுவநாதர் கீழவீதி, **கும்பகோணம்.**

குடல், இரைப்பை கோளாறுகளுக்கு ஆப்ரேஷன் தேவையில்லை.

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்

REGISTERED TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்கு குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

For Coimbatore, Palghat & Nilgiris:

B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
COIMBATORE.